GOKULAM

கோகுலம்

நவம்பர் 2005

குழந்தைகளின் குதூகலம்



MILKA

WONDER CAKE



அற்புதமான ஆறு சுவைகளில்

கோகுலம்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :

கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :

எஸ். சுஜாதா

வடிவமைப்பு :

எஸ். ஸ்டீஃபன்

பி.ஆர். ராஜன்

தொலைபேசி :

22251522 / 22250623

22251324

தொலைநகல் :

044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :

gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :

subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :

info@kalkiweekly.com

சந்தா விவரம் :

உள்நாடு :

ஒரு வருடம் : ரூ.72/-

வெளிநாடு

(விமானத்தபால்) :

ஒரு வருடம் : 24 யுஎஸ். டாலர்

இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,

Kalki Buildings,

47-NP, Jawaharlal Nehru Road,

Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!





நவம்பர் 2005 ❖ மலர் : 23 ❖ இதழ் : 10

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்

அன்புள்ள உங்களுக்கு...



சென்ற இதழில் அறிவித்த கருத்துப் படிவத்துக்கு உங்களிடமிருந்து எதிர்பாராத அளவுக்கு வரவேற்பு இருந்தது கண்டு ரொம்ப சந்தோஷம். உங்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கருத்துப் படிவத்தைப் படிக்கும்போது உங்களின் விருப்பம், கோகுலத்தின் மீது நீங்கள் வைத்திருக்கும் அன்பு ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிந்தது. பரிசு பற்றிய அறிவிப்பு அடுத்த இதழில் வெளியிடப்படும்.



பண்டிகை மகிழ்ச்சி!!

இந்த ஆண்டு தீபாவளி, ரம்ஜான் என இரண்டு பண்டிகைகளும் அடுத்தடுத்து வருகின்றன. எல்லோருக்கும் பண்டிகைக்கான மூட் வந்திருக்கும்.

இன்று எந்தப் பண்டிகையாக இருந்தாலும் அந்த நாளை முழுமையாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அபகரித்துக் கொள்கின்றன. பண்டிகைகள் என்பதே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக உருவானதோ என சந்தேகம் கொள்ளும்படி நம்மை ஆக்கிரமித்துள்ளன.


இந்த நிலையை மாற்ற நம்மால் முடியும். பண்டிகை கொண்டாடாத நண்பர்களை நம் வீட்டுக்கு அழைக்கலாம். நாமும் நண்பர்களின் வீட்டுக்குச் சென்று வாழ்த்துகளையும் பட்சணங்களையும் பறிமாறிக் கொள்ளலாம். இல்லாதவர்களுக்கு நம்மால் முடிந்த பொருளுதவி அளிக்கலாம். ஆதரவற்றவர்களுக்குப் பண்டிகையை முன்னிட்டு உணவு, உடை, பணம் அளிக்கலாம். பண்டிகை என்பது நாம் சந்தோஷமடைவதோடு, நம்மால் பிறரும் சந்தோஷமடைய வேண்டும். இதைச் செய்து பாருங்கள். கொடுத்தவர்களுக்கும் மகிழ்ச்சி; வாங்கியவர்களுக்கும் மகிழ்ச்சி. இதை அனுபவித்தால்தான் உணர முடியும்!

அனைவருக்கும் தீபாவளி - ரம்ஜான் நல்வாழ்த்துகள்!

அன்புடன்
உங்கள் கோகு

வண்ணம் தீட்டுங்கள்!





நிறைய காமிக் கதைகள் உங்களுக்குத் தெரியும். ஆனால் காமிக் கதைகள் உருவான கதை தெரியுமா? இதோ உங்களுக்காக ஒரு மினி காமிக் டூர்.

காமிக் புத்தகத்தின் தோற்றத்தை ஆராயும்பொழுது அநேகமாக நாம் எகிப்திய சித்திர எழுத்துகளில் தான் போய் நிற்க வேண்டியிருக்கும். பொம்மை பொம்மையாக வரையப்பட்ட எகிப்திய எழுத்துகள் கிட்டத்தட்ட இன்றைய காமிக் புத்தகங்களின் முன்னோடி என்று சொல்லலாம். எழுத்துகள் தேவையில்லை. பொம்மைகள் மூலமாகவே நிறைய சங்கதிகளைச் சொல்ல முடியும் என்று எகிப்திய எழுத்துகள் நமக்கு கற்றுக் கொடுத்தன.



காமிக் கதைகள் உருவான கதை!



முதல் முதலில் அச்சாகி வெளியான காமிக் புத்தகம் ரிச்சர்ட் ஃபெண்டன் அவுட்கால்ட் என்பவர் எழுதிய தி யெல்லோ கிட். இந்தப் புத்தகம் வெளியான வருடம் 1896. ஆம், யெல்லோ கிட் நூறு வருடங்கள் சீனியரான புத்தகம்!

இந்தப் புத்தகத்தில் மற்றொரு ஆச்சரியமும் இருக்கிறது. காமிக் புத்தகங்களைப் பற்றி ஆராய்பவர்கள் அனைவரும் இந்தப் புத்தகத்தை ஒரு மைல்கல் என்றுதான்



மருதன்

சொல்வார்கள். அப்படி அவர்கள் சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இந்தப் புத்தகத்தில் தான் முதல் முறையாக கார்ட்டூன் கேரக்டர்கள் ஃபெண்டன் புகுத்திய புதுமையில் பேசத் தொடங்கின. அது எப்படி?

பேச விரும்பும் கதாபாத்திரத் திற்கு அருகே ஒரு பலூனை வரைந்து உள்ளே சில வார்த்தை களை எழுதி வைத்தார் ஃபெண் டன். பிறகு, அந்த பலூனுக்கு ஒரு குட்டி வால் ஒன்றை ஒட்ட வைத் தார். அடுத்து, அந்த வாலை குறிப்பிட்ட கேரக்டரின் வாய்க்கு அருகே கொண்டு சென்றார். அதாவது குறிப்பிட்ட கேரக்டர் பலூனுக்குள்ளே உள்ள குறிப் பிட்ட வார்த்தைகளைப் பேசுகிறது





என்று அர்த்தம். இன்று இந்த டெக்னிக் சர்வ சாதாரணமாக அனைத்து காமிக் புத்தகங்களிலும் உபயோகப்படுத்தப்படுகிறது.

சரி, காமிக் கதைகளின் கதாபாத்திரங்கள் யார் யார்? பெரும்பாலும் பூனை, நாய், எலி போன்ற வீட்டு வளர்ப்புப் பிராணிகள் தான் ஹீரோவா கவும் ஹீரோயி னாகவும் நடித்து வந்தன. இவற் றைப் பற்றிய கதைகள் தான்



அதிகமாகச் சொல்லப்பட்டன. இன்றளவும் இவர்கள் காமிக் கதைகளில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறார்கள்.

1930 முதல் கார்ட்டூனில் சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. வீரதீர சாகசம் புரியும் பாத்திரங்கள் அதிகமாக வெளி வரத் தொடங்கின. ப்ளாஷ்கார்டன், டார்சான் போன்றவர்களின் சாகசம் அனைவரையும் மகிழ்வித்தது. டமால், டுமீல் என்று சண்டை போடும் ஆக்ஷன் ஹீரோக்கள் குறிப்பாக சிறுவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை கொடுத்தது. அறிவியல் துறையின் முன்னேற்றம் காமிக் உலகிலும் சில முன்னேற்றங்களை ஏற்படுத்தியது. புது வகையான சயின்ஸ் ஃபிக்ஷன் கதைகளை காமிக் எழுத்தாளர்கள் எழுதத் தொடங்கினர். இவர்களுள் முக்கியமானவர் லீ ஃபாக். இவரது புகழ்பெற்ற படைப்பு ஃபாண்தம்.



''நமக்கு கிழக்கே கடல், தெற்கே கடல், வடக்கே என்ன இருக்கு?''
''எட்டாம் வகுப்பு சார்!''
- ஆர். ஆர். பூபதி

மற்றொரு அபாரமான படைப்பு மாண்ட்ரேக் தி மஜீஷியன். ஸ்பினாக் சாப்பிட்டவுடன் அற்புத ஆற்றல்களைப் பெற்று வெளுத்து வாங்கும் பாப்பாயீ உருவானதும் இந்தக் காலகட்டத்தில்தான். இவரை உருவாக்கியவர் எல்ஸி செகர்.

காமிக் கதைகள் எல்லாமே அமெரிக்காவிலிருந்து மட்டுமே தோன்றியவை என்று நினைத்து விடக் கூடாது. ஃபிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளிலிருந்தும் பல கார்ட்டூன் கதைகள் வெளிவரத் தொடங்கின. ஆனால் மிகப் பெரிய அளவில் அனைவரையும் அவை கவர்ந்தன என்று சொல்ல முடியாது. இருப்பினும் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு சூப்பர் ஹீரோ டின் டின். இந்த அற்புதக் கதாபாத்திரத்தை உருவாக்கியவர் பெல்ஜிக் ஹெர்ஜ் என்பவர்.

டின் டின்னை காமிக் ரசிகர்கள் ரசித்துக் கொண்டிருந்த அதே சமயம் அமெரிக்காவில் சீகல், ஷஸ்டர் என்ற இருவரும் இணைந்து ஒரு சாகச நாயகனை உருவாக்கி வானில் பறக்க விட்டார்கள். அவ்வளவு தான். ஒட்டு மொத்த ரசிகர்களையும் அந்தக் கதாபாத்திரம் தன் பக்கம் இழுத்துக் கொண்டது. அவர் தான் சூப்பர் மேன். நவீன காமிக் உலகின் சூப்பர் ஹீரோவாக மாறிப்போனார் சூப்பர்மேன்.

1940லிருந்து 1945 வரையிலான 5 வருடங்களில் மட்டும் கிட்டத்தட்ட 400 சூப்பர் ஹீரோக்கள் களத்தில் குதித்தனர். இவர்கள் அனைவருமே சூப்பர்

மேனைப் பார்த்து உருவானவர்கள்தான். ஆனால் பாவம். இந்த நானூறு பேரில் ஒரு சிலர் தான் பிழைத்துக் கொண்டனர். அவர்களுள் முக்கியமான இருவர். ஒருவர் பேட்மேன் மற்றொருவர் கேப்டன் மார்வல். இந்த இருவரையும் ஒப்பிட்டால், பேட்மேனின் வளர்ச்சி அசுரத்தனமானது. எந்த அளவிற்கு தெரியுமா? 1980களில் தன் குருவான சூப்பர்மேனையே விஞ்சினார் பேட்மேன். கேப்டன் அமெரிக்கா என்பவர் இரண்டாம் உலகப்போரின் பொழுது துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு ஹிட்லரோடு சண்டைக்குப் போனார்.

காமெடி, ஆக்ஷன் என்று ரொம்ப பிஸியாக இருந்த காமிக் நாயகர்களைப் புத்திசாலித்தனமாக யோசிக்க வைத்தவர் ரான் கோஸின்னி. நிறைய படித்து, நிறைய ஆராய்ச்சிகள் செய்து தனது நாயகனை உருவாக்கினார் கோஸின்னி. 1959ல் களத்தில் குதித்த ஆஸ்ட்ரிக்ஸ் உடனடியாக காமிக் மன்னனாக தன்னை முடிசூட்டிக் கொண்டார்.



''ஓடும் பஸ்சில் டிரைவரும், கண்டக்டரும் தூங்கினால் என்ன ஆகும்?''

''கண்டக்டர் தூங்கினால் யாருக்கும் டிக்கெட் கிடைக்காது. டிரைவர் தூங்கினால் எல்லோருக்கும் டிக்கெட் கிடைக்கும்!''


- எம். வினோத்

1960களில் மறுபடியும் டிஷ்யூம் டிஷ்யூம் கேரக்டர்கள் வரத் தொடங்கின. எக்ஸ்மேன், ஹல்க், பென்டாஸ்டிக் ஃபோர் என்று பல ஹீரோக்கள் சட்டையை மடித்து விட்டுக் கொண்டு களத்தில் குதித்தனர். இவர்களுள் மறக்க முடியாதவர் ஸ்பைடர் மேன்.

காமிக் உலகில் மேலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. புத்தகங்களில் மட்டும் உலா வந்த பல நாயகர்கள் திரைப்படங்களையும் வெற்றிகரமாக ஆக்கிரமித்தனர். டாம் அண்டு ஜெர்ரி, மிக்கி மவுஸ் போன்ற பாத்திரங்கள் பெரியவர்களையும் அதிகமாக கவர்ந்தன. காமிக் புத்தகம் என்றாலே அவை குழந்தைகளுக்கு தான் என்ற நிலை 1980களில் மாறத் தொடங்கியது. மாறாக, காமிக் படிப்பவர்கள் அனைவரும் அதைப் படிக்கிற வரையில் குழந்தைகளாக மாறிப் போகிறாகள் என்பதைப் பலர் உணர்ந்து கொண்டனர். இது காமிக் இலக்கியத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி!

விளைச்சலின் ரகசியம்!

கதை : ஆர். சாரதா
படம் : பிள்ளை




அறுவடை காலம் வந்தது. ராமசாமி மகன்களை அழைத்தார்.
ஏன் விளைச்சலும் தரமும் இந்தத் தடவை குறைந்து போய் விட்டது?
தெரியலையேப்பா!
ம்... பக்கத்து வயல்காரர்களுக்கு விதைகளை நீங்கள் கொடுத்தீர்களா?
இல்லை, வித்துட்டோம்.
அட முட்டாள்களா! காற்றுல பக்கத்து வயல்களிலிருந்து வந்து மகரந்த சேர்க்கை நடக்கும். அவங்க பயிர் நல்லா இல்லைன்னா அது நம்ம பயிரோடு கலந்து நம்ம பயிரின் தரத்தையும் பாதிச்சுடும்...
அதனாலதான் அவர்களுக்கு நல்ல விதைகளைக் கொடுத்தேன்.
மன்னித்து விடுங்கள். இனி இப்படி செய்ய மாட்டோம்.




செய்தி நேரம்



கண்டுபிடிப்புக்குள் ஒரு கண்டுபிடிப்பு!

நம் நாட்டில் மருத்துவம் படிக்கும் மாணவர்கள் நிஜ நோயாளிகளை வைத்துத்தான் பயிற்சி பெறுகிறார்கள். ஆனால் மெக்சிகோவில் உள்ள யு.என்.ஏ.எம். பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்களோ அங்கு 24 ரோபோ மனிதர்களை (நோயாளிகளை) வைத்துத்தான் பாடம் படிக்கின்றனர். இந்த ரோபோ நோயாளிகளின் அனைத்து உறுப்புகளும் செயற்கையே... ரத்தமும் செயற்கையே... மாணவரின் தேவைக்கு ஏற்ப இந்த ரோபோக்களை புற்றுநோய், நீரிழிவு நோயாளியாக மாற்றிக் கொள்ளலாம்.



கடந்த ஜூலை மாதம் அமெரிக்காவின் வானிலை அறிஞர் மைக்கேல் பிரவுன் ஒரு புதிய கிரகத்தைக் கண்டுபிடித்தார். 'செனா' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் கிரகத்துக்கு ஒரு துணைக்கோள் இருப்பது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தத் துணைக் கோள் வேறெதுவுமல்ல, சந்திரன்தான். அதற்கு 'கேப்ரில்லா' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுவது வாடிக்கைதான். இம்முறை அமெரிக்க விஞ்ஞானிகளான ஜான் L.ஹால், ராய் J.கிளாபர் மற்றும் ஜெர்மனைச் சேர்ந்த தியோடர் ஹென்ச் ஆகியோருக்கு இயற்பியல் துறையில் நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. ஒளியியல் (light) துறையில் சிறப்பாக ஆராய்ச்சி செய்தமைக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்கர் ஒருவர் ஒரு நாளைக்கு அனைத்து தேவைகளுக்காகவும் ஏறக்குறைய 63 லிட்டர் தண்ணீரைச் சராசரியாகப் பயன்படுத்துகிறார்.

- முத்து

சிங்க மாப்பிள்ளை கறுப்புக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு விமானப்படிகளில் இறங்கினார். அமைச்சர் நரியார் கையசைத்து உத்தரவு கொடுத்ததும் குரங்குப் படையினர் தயாராக விரித்து வைத்திருந்த ஆயிரம் வாலா சரத்தில் தீவைத்தனர். அவ்வளவுதான் அந்த யானை மலைக் காடே அதிரும்படி ஏழு நிமிடங்கள் வரை விடாது வெடித்துத் தீர்த்தது.

தரையில்கூட காலை வைக்காது அப்படியே நின்றுவிட்டார் தலை தீபாவளிக்காக அமெரிக்காவிலிருந்து வந்திருந்த சிங்க மாப்பிள்ளை. ஆயிரம் வாலா எழுப்பிய புகைமண்டலம் தெளியவே கால் மணி நேரமானது. ஒரு வழியாக மாப்பிள்ளை கீழே இறங்கினார். முகத்தில் ஒரே கடுகடுப்பு.

எல்லா மேளதாளங்களும் ஒரே நேரத்தில் இசைக்க அலங்கரிக்கப்பட்ட காரில் அமெரிக்க சிங்க மாப்பிள்ளை அரண்மனைக்குக் கிளம்பினார். ஒரு வழியாக அவரது முகத்தில் நிறைந்திருந்த கடுகடுப்பு மறைந்து புன்னகைக்கத்




தொடங்கினார். கார் அரண்மனைக்கு வந்தது. ஆரத்தி எடுத்து மாப்பிள்ளை வலது காலை வைத்த உடனேயே, ஆயிரம் வாலா சரவெடி அரண்மனையையும் சுற்றுவட்டாரத்தையும் கால் மணி நேரம் கதிகலங்க வைத்து ஓய்ந்தது. மாப்பிள்ளையின் முகத்தில் மறைந்திருந்த கடுகடுப்பு முன்னிலும் கடுமையாக நிறைந்தது.

''இந்த ஆயிரம்வாலா சரவெடிக்கு யார் பொறுப்போ அவர்களை உடனே வந்து பார்க்கச் சொல்லுங்கள்'' என்று உத்தரவிட்டுவிட்டு ஓய்வுபெறச் சென்றார் மாப்பிள்ளை.

அமைச்சர் நரியாரைக் கையுடன் அழைத்து வரச்சொல்லி ஆளனுப்பினார் சிங்கராணியார். நரியார்தான் வரவேற்பு வெடிகள் வாணவேடிக்கைகளுக்கெல்லாம் பொறுப்பேற்றிருப்பவர்.

''அமைச்சரே, மாப்பிள்ளை எதற்காக அழைக்கிறார் என்பது தெரியவில்லை. ஒருவேளை அவங்க அமெரிக்காவில இந்த மாதிரியான வாலாக்கள் வாணங்களெல்லாம் இல்லையோ





"நான் இதுவரைக்கும் எந்தப் போட்டியிலேயும் தோல்வியையே சந்திச்சது இல்ல."

"அப்படியா? ஆச்சரியமா இருக்கே!"

"இதில என்ன ஆச்சரியம்? நான் இதுவரைக்கும் எந்தப் போட்டியிலேயும் கலந்துக்கவே இல்லையே!"

- மு.பெரியசாமி

என்னமோ! அதுனால அதுல எல்லாம் ரகத்துக்கு ஆயிரம் தயார் பண்ணி நல்லா பேக் பண்ணி வையிங்க. போறப்போ எடுத்துக்கிட்டுப்போறேன்னு சொல்லப் போறாரோ என்னமோ" என்றார் சிங்கராணியார்.

"அப்ப அமைச்சருக்கு முத்து மாலை கூடப் பரிசாக் கொடுத்தாலும் கொடுக்கலாம் இல்லையா?" என்று கேட்டார் சிங்கராஜா.

அளவில்லாத மகிழ்ச்சியோடு சிங்கமாப்பிள்ளை தங்கியிருந்த மாளிகைக்குச் சென்றார் அமைச்சர் நரியார்.

எடுத்த எடுப்பிலேயே "நீங்கதானா இந்த வாணம் வெடிக்கெல்லாம் ஏற்பாடு செய்தவர்?" என்று பலத்த கோப உறுமலோடு கர்ஜித்து வரவேற்றார் மாப்பிள்ளை.

அமைச்சருக்கு உடம்பெல்லாம் மார்கழி மாதப் பனியில் நனைந்த மாதிரி நடுங்கியது.

"இந்த அழகில் நீங்கதான் இங்கே அமைச்சர்வேற. ஒவ்வொரு வெடிவெடிக்கும்போதும் எத்தனை கரியமிலவாயு வெளியாகும் தெரியுமா? எத்தனை சத்தம் உண்டாகும் தெரியுமா? காட்டிலுள்ள தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் எவ்வளவு பாதிப்பு உண்டாகும் தெரியுமா? மனிதர்கள்தான் மரங்களை வெட்டி சுற்றுப்புறச் சூழலைப் பாதிப்படைய வைக்கிறாங்கன்னா நாமுமா நம்ம கையாலேயே இதையெல்லாம் செய்யணும்? உங்க காட்டுல பண்டிகைகளையெல்லாம் இப்படித்தான் பூமியும் வானமும் அதிர, வெடிவைத்துக் கொண்டாடுவீங்களா?" என்று கேட்டார் மாப்பிள்ளை.

"எல்லாப் பண்டிகைக்கும் இல்லை. தீபாவளிக்கு மட்டும்தான். அதோட யாராவது இறந்து விட்டாலும் வெடி வைப்போம். அவ்வளவுதான்!" என்று பரிதாபமாகக் குழைந்தார் அமைச்சர் நரியார்.

"சரியான காட்டுமிராண்டிக் காடு. எப்பவும் தயாரா இருக்கும்படிதான் விமானத்தை நிறுத்தி வைச்சிருக்கேன். இப்பவே கிளம்பறேன். இந்த இடம் எனக்குச் சரிப்படாது. என் பெயரைச் சொல்லி தலை தீபாவளியை நீங்களே கொண்டாடிக்கிங்க" என்றார் உறுதியாக.

"இது காலங்காலமா இருக்கும் வழக்கம். அதுவும் உங்களுக்குத் தனிமரியாதை தருவதாக நினைத்து கொள்ளுத்தாத்தா மூத்த சிங்கமகாராஜா செய்யச் சொன்ன ஏற்பாடு. இப்பொழுது வாழ்ந்துவரும் சிங்க பரம்பரையில் அவரே மிகவும் வயதானவர். அவருடைய சொல்லுக்கு

எதிராகப் பேசுபவர்கள் பதினைந்து காடுகளில் யாருமில்லை என்றாலே அவருடைய பெருமையை உணரலாம். உங்களுக்கு வெடியும் வாணமும் பிடிக்கவில்லை என்றால் கண்டிப்பாக வெடிக்க மாட்டோம். உடனே நாடு திரும்பும் முடிவை தயவுசெய்து மாற்றிக் கொள்ளுங்கள்'' எனறு திறமையாகப் பேசினார் அனுபவசாலியான அமைச்சர் நரியார்.

''ஆமாம் மாப்பிள்ளை! கொள்ளுத் தாத்தா விரும்பினார் என்பதற்காகத்தான் அதுவும் உங்களுக்குத் தனிமரியாதை தருவதாக நினைத்துத்தான் இவ்வளவு ஏற்பாடும். இதெல்லாம் சுற்றுப்புறச் சூழலைப் பாதிப்பதோடு நமது செவிப் புலனையும் பாதிக்கும் என்று நீங்கள் கருதினால் அமைச்சர் சொன்னபடி உடனே இதையெல்லாம் நிறுத்தி விடுகிறோம். ஊருக்குக் கிளம்பும் முடிவை மாற்றிக் கொள்ளுங்கள்'' என்று பணிவாகக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தனர் சிங்க ராஜாவும் ராணியாரும்.

''காலங்காலமாக இருந்து வரும் வழக்கத்தை உடனே மாற்றிக் கொள்வது கடினம்தான். ஆனால் இதெல்லாம் நம்மைப் பெரிதும் பாதிப்பவை என்ற உண்மையையாவது உணர்ந்து கொள்ள வேண்டும். இயன்ற வரை குறைத்துக் கொண்டே வந்தால்கூடப் போதும். இந்தியாவில்கூட பெரிய நகரங்களில் ஆட்டம்பாம் போன்ற பயங்கரவெடிகளை வெடிக்கத் தடையிருக்கிறது. அதிக ஓசையில்லாத வெடிகளை மட்டும், அதுவும் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே வெடிக்க அனுமதி இருக்கிறது. இதுபோல் நாமும் நம்ம அதிகாரத்திற்குட்பட்ட காடுகளில் கட்டுப்பாடு செய்தாக வேண்டாமா?'' என்று கேட்டார் மாப்பிள்ளை.

சிங்க தம்பதியர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

''இதற்குக்கூட நீங்களே நல்லதாக ஒரு வழியைச் சொல்லுங்கள் மாப்பிள்ளை. உடனே உத்தரவு போட்டு விடுவோம். நம் விலங்குகள் உத்தரவுகளுக்குக் கட்டுப்படுபவை. மனிதர்களைப்போல அல்ல'' என்றார் அனுபவசாலியான அமைச்சர்.

அறைவாசலில் யாரோ வருவது தெரிந்தது. தள்ளுவண்டியில் கொள்ளுத்தாத்தா சிங்கமகாராஜாவை உட்கார வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

''எல்லோரும் விருந்து மண்டபத்தில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மாப்பிள்ளை வரக்காணோமே. என்ன தாமதம் என்று பார்த்து விட்டுப் போகத்தான் நானே



''மாறு வேடத்தில் வந்திருப்பவர் மன்னர் என்று எப்படி கண்டுபிடிச்சே...?''
''வாள் சண்டைக்குத் தயாரா என்று கேட்டதும் பயந்து ஓடிவிட்டாரே!''
- எஸ். மோகன்



விருந்துக்குப் போவோம்'' என்று உற்சாகப்படுத்தினார் மாப்பிள்ளை.

தீபாவளியன்று காலை. எல்லோரும் குளித்துப் புத்தாடை அணிந்து சாமி கும்பிட்டனர். புதிய உத்தரவால் சுற்றுப் புறத்தையே கதி கலக்கி காதைப் பிளக்கும் வெடிகள் எதுவும் வெடிக்கப் படவில்லை. ஊசிச்சரங்கள் வெடிக்கும் மெலிதான வெடிச் சத்தம் மட்டுமே கேட்டது. சிங்க மகாராஜாவை மாப்பிள்ளை எப்படி சமாளிக்கப் போகிறார் என்பதைக் காண எல்லோரும் ஆவலோடு காத்திருந்தனர். மாப்பிள்ளை தன் கையிலிருந்த பாட்டரியால் இயங்கும் காது கேட்கும் கருவியை சிங்க மகாராஜாவின் காதில் அணிவித்தார். அமைச்சரிடம் ''இன்னும் இதை இயக்கவில்லை. அதிகச் சத்தம் கேட்கும்படி வைத்திருக்கிறேன். ஊசிச்சரத்தை வெடியுங்கள். வெடிக்க ஆரம்பித்ததும் இதன் பட்டனைப் போட்டுக் கேட்க வைக்கிறேன். வேடிக்கையைப் பாருங்கள்'' என்றார்.

ஊசிச்சரம் வெடிக்கத் தொடங்கியதும் பிரமித்துப்போன சிங்கமகாராஜா ''அமைச்சரே, என்ன இது? ஆட்டம்பாமில்கூட ஆயிரம்வாலாவெல்லாம் வந்துவிட்டதா? இப்படி காதைப் பிளக்கிறதே வெடிச்சத்தம்!'' என்று மகிழ்சி வெள்ளத்தில் ஆழ்ந்தார்.

''எனக்குத்தான் தந்திரக்கார நரியமைச்சர்னு பட்டம். நீங்க தந்திரக்கார மாப்பிள்ளையாகி எனக்கு மேல் உயர்ந்து விட்டீர்களே!'' என்று மாப்பிள்ளையின் காதில் கிசுகிசுத்து விட்டு அவர் கைகளைப் பிடித்து மகிழ்ச்சியோடு குலுக்கினார் அமைச்சர் நரியார்.

வந்தேன்'' என்றார் சிங்கமகாராஜா.

''இதற்காக நீங்களே வர வேண்டுமா? இதோ கிளம்பிக் கொண்டேயிருக்கிறேன்'' என்றார் சிங்கமாப்பிள்ளை.

''கொள்ளுத் தாத்தாவுக்கு சுத்தமாகவே இரண்டு காதும் கேட்கலே மாப்பிள்ளை. பார்வையும் குறைஞ்சு போச்சு. ஆயிரம்வாலா பத்தாவது வெடிக்கணும்னு சொன்னேனே? வரவர நான் சொல்றதை யாருமே கேட்பதில்லைன்னு கோபப்பட்டு விருந்துக்கே வரமாட்டேன்னு முரண்டு செய்தார். காலையில் அவர் கண்ணெதிரேயே வெடிக்கறோம்னு சமாதானப்படுத்தியிருக்கேன்'' என்று தன்னுடைய பரிதாப நிலையை விளக்கினார்.

சிங்கமாப்பிள்ளை சிறிது நேரம் பேசவே இல்லை. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு ''அமைச்சரே, உங்கள் நிலை எனக்குப் புரிகிறது. ஊசிச்சரம் மட்டுமே வெடிக்கலாம்னு உத்தரவு போடுங்கள். சிங்கமகாராஜாவை மகிழ்விப்பது என் பொறுப்பு. இப்பொழுது எல்லோரும்





தீபாவளிச் சிரிப்பு!



''தீபாவளி அன்னிக்கு குழந்தை பிறந்தா என்ன பேர் வைக்கலாம்?''

''வெடிவேலுன்னு வையேன்!''

என்ன பெயர் வைக்கலாம்?

முத்து



''எரிமலைக்கும் பட்டாசுக்கும் என்ன வித்தியாசம்?''

''தெரியலையே...''

''பட்டாசு பத்த வைச்சாத்தான் வெடிக்கும். எரிமலை பத்த வைக்காமலேயே வெடிக்கும்!''



''ஏங்க பையனை அடிக்கிறீங்க...''

''பின்னே என்ன... தீபாவளிக்கு கோடு போட்ட சட்டை கேட்டா வாங்கித் தரலாம்... இவன் என்னடான்னா வெடிபோட்ட சட்டை வேணும்னு அடம்பிடிக்கறான்!''

''ஏன் அந்த யானை வெடி கன்னாபின்னான்னு வெடிக்குது?''

''ஒருவேளை மதம் பிடிச்சுருக்குமோ... என்னவோ...!''



வாழ்த்து!

எங்கள் உறவினர் ஒருவர் சுமார் பத்து ஆண்டுகளாக அமெரிக்காவில் இருந்துவிட்டு தமிழ்ப் புத்தாண்டின்போது இந்தியா வந்தார். அவருக்குப் புத்தாண்டு வாழ்த்து சொல்வதற்காக ஒரு கிரீட்டிங் கார்டு வாங்கி அதில் எழுதிக் கொண்டிருந்தோம். அம்மா, என் தங்கை மினுவையும் எழுதச் சொன்னார். அவள் தவறுதலாக, 'பத்தாண்டு வாழ்த்துகள்' என்று எழுதினாள். அதைக் கவனித்த அம்மா, ''மினு! 'பு'க்கு பதிலாக 'ப'ன்னு போட்டிருக்கே பார்... அதனால் 'பத்து ஆண்டு'ன்னு பொருள் வருது!'' என்றார். உடனே மினு, ''நாம்தான் பத்து ஆண்டுகளாக அவருக்கு வாழ்த்து சொல்லவே இல்லையே. அதனால் தான் 10 வருடங்களுக்கும் சேர்த்து பத்தாண்டு வாழ்த்துகள் என்று எழுதியிருக்கிறேன்'' என்று சமாளித்தாளே பார்க்கலாம்!

- எம்.மோகன்,
சங்கரன்கோவில்





மேய்க்கும் நேரம்!

நாங்கள் சித்தி வீட்டிற்குச் சென்றிருந்தோம். அப்போது சித்தி மகன் பாடப் புத்தகங்களை விரித்துப் போட்டுவிட்டு எங்கோ விளையாடச் சென்றுவிட்டான். அவன் விளையாடிவிட்டு வந்ததும் அவனிடம் என் தம்பி, ''நீ எப்பப் பார்த்தாலும் விளையாடிட்டே இருக்கியே, படிக்காம எவ்வளவு நேரம் மாடு மேய்க்கிறே?'' என்று வேடிக்கையாகக் கேட்டான். அதற்கு அவன் சற்றும் சளைக்காமல், ''நீ எவ்வளவு நேரம் கழுதை மேய்ப்பியோ அவ்வளவு நேரம் நான் மாடு மேய்ப்பேன்'' என்று ஒரு போடு போட நாங்கள் அனைவரும் சிரித்து விட்டோம்!

- பூ.கு.கபிலன் கணபதி,
திருப்பூர்

குளிப்பாட்டுதல்!

குளிக்காமல் பள்ளிக்கு வரும்

மாணவர்களை மிகவும் கண்டிப்பார் எங்கள் வகுப்பாசிரியர். ஒரு நாள் மாணவன் ஒருவன் குளிக்காமல் வந்துவிட்டான். அவனை அதட்ட லோடு ஆசிரியர் அழைத்தார். அந்த மாணவன் திறமையாகப் பேசி எல் லோரையும் மயக்கிவிடுவான். ஆசிரி யரிடம் சென்று வழக்கம் போல் ஏதோ சொல்ல ஆரம்பித்தான். அவன் பேசிக் கொண்டே இருக்க, ஆசிரியரும் அதற்குத் தலையாட்டிக் கொண்டே இருந்தார். உடனே ஒரு மாணவன் எழுந்து "சார், அவனை நம்பாதீங்க உங்களைக் குளிப்பாட்ட (பேச்சால்) பார்க்கிறான்" என்று சொல்ல ஆசிரியர் உட்பட நாங் களும் சிரித்துவிட்டோம். பள்ளி நீர்த் தொட்டிக்கு அழைத் துச் சென்று ஆசிரி யரே குளிப்பாட்டினார்.

- சு.அபிராமி,
புதுக்கோட்டை



பத்தாண்டு வாழ்த்துகள்!

ல... ள.... ழ...

டியூஷன் ஆசிரியர் வீட்டுக்கே வந்து பாடம் சொல்லிக் கொடுப் பார். ஒரு நாள் ல, ள, ழ பேதங் களைச் சொல்லித் தந்தார். நான் சரியாகப் புரிந்து கொள்ளததால் காதைத் திருகினார். வலி உயிர் போனது. அந்த நேரம் பார்த்து தாத்தா உள்ளே வந்தார். ஆசிரியரை ஏதாவது கேட்பார் என்று நினைத் தேன். கவனிக்காதது போல் சென்று விட்டார். ஆசிரியர் சென்றதும் என் ஆச்சி அவரைக் கோபித்துக் கொண் டார். "உன் பேத்தி நல்லா படிக் கணும்னுதானே அவர் இப்படி செய்தார்" என்று சமாதானப்படுத்தி னார் தாத்தா.

- பா. கார்த்திகா, பதினோராம்
வகுப்பு, அ.மே.நி. பள்ளி,
சென்னை






அருணகிரி, ராசப்பன் இருவரும் மன்னர் மச்சேந்திரனிடம் மெய்க்காப்பாளராக பணியாற்றி வந்தனர். தன்னுடைய நற்பண்புகளால் மன்னரின் உள்ளத்தில் இடம் பிடித்துவிட்டான் அருணகிரி. மன்னரும் பல சமயங்களில் அவனுடைய செயலையும் சேவையையும் பாராட்டி பரிசுகள் வழங்கினார். இருவருக்கும் ஒரே மாதிரி வேலை. அப்படி இருக்க மன்னர் தன்னைவிட அருணகிரியைப் பாராட்டி முக்கியத்துவம் கொடுப்பது ராசப்பனால் பொறுக்க முடியவில்லை. மன்னருக்கு அவன் மீது வெறுப்பும் கோபமும் உண்டாகும்படி ஏதாவது செய்ய வேண்டும் என்று அவன் உள்ளம் துடித்தது.


அன்று முன்னிரவு நேரம். ராசப்பனுக்கு உறக்கம் வரவில்லை. வீட்டைவிட்டு கால்போனபடி நடந்து கொண்டிருந்தான்.

அப்போது அங்கே ஓர் ஆள் பெரிய சாக்குமூட்டையை முதுகில் சுமக்க முடியாமல் சுமந்தபடி வந்து கொண்டிருந்தான். பாலத்தின் மீது அமர்ந்து கொண்டிருக்கும் தன்னைப் பார்த்ததும் அவன் நடையில் தடங்கல் ஏற்பட்டு தயங்கி நிற்பது தெரிந்தது. ராசப்பனுக்கு வந்திருப்பது திருடன்தான் என்று புரிந்துவிட்டது. அவன் மூளையில் மின்னல் போல் யோசனை ஒன்று பளிச்சிட்டது.

அவ்வளவுதான். மறு நொடியே பாலத்திலிருந்து இறங்கி வேகமாகத் திருடனை நோக்கி ஓட, இவனைப் பார்த்த திருடன் ஓட... சாக்கு மூட்டையைச் சுமந்து கொண்டு அவனால் வேகமாக ஓட முடியவில்லை. சில நொடிகளில் ராசப்பன் திருடனைப் பிடித்துவிட்டான்.

''ஐயா! என்னை ஒன்றும் செஞ்சுடாதீங்க. என்னை விட்டுவிடுங்க'' என்று





டி. ஜானகி

அருணகிரி வீட்டில் திருட்டு!

நடுங்கிக் கொண்டே கெஞ்சினான்.

''நான் சொல்கிறபடி கேட்டால் உன்னைவிட்டு விடுகிறேன்'' என்றான் ராசப்பன்.

''நீங்க சொல்றதக் கேக்கறேன்''

''நான் சொல்லும் வீட்டில் இந்தத் திருட்டுப் பொருட்களை வைத்துவிட்டு திரும்பிப் பார்க்



காமல் அப்படியே ஓடிவிட வேண்டும்'' என்றான். திருடனும் ''சரி'' என்று சொல்லி சாக்கு மூட்டையை எடுத்துக் கொண்டான்.

ஒரு வழியாக அருணகிரி வசிக்கும் தெருவை இருவரும் அடைந்தனர். வீதிக்குள் ராசப்பன் நுழையாது தெரு முனையிலேயே அருணகிரியின் மாடி வீட்டை அடையாளம் காட்டினான்.

''ஐயா!'' என்று திருடன் தயங்கியபடி ஏதோ சொல்ல முயல... மேற்கொண்டு அவனைப் பேச விடாது எச்சரிக்கை செய்ய, திருடன் அருணகிரியின் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தான்.

சுற்றும் முற்றும் பார்த்த ராசப்பன் திருடன் அருணகிரியின் வீட்டுப் படியில் ஏறுவதைப் பார்த்ததும், 'நாளைக்கு சாமான்களைத் திருட்டுக் கொடுத்தவன் மன்னரிடம் சொல்வான். மன்னர் ஆட்களைவிட்டு தேடச் சொல்லும்போது ரகசியமாக நான் அருணகிரி வீட்டைக் காட்டிக் கொடுத்துவிடுவேன். அருணகிரி... நீ... மாட்டிக்கிட்டே' என்று மனதிற்குள் கூறியபடி சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

வெகுநேரம் வரை தூங்காது அப்போதுதான் கண் அயர்ந்தான். கனவில் ''மன்னரே! திருட்டுப் போன என் சாமான்கள் அனைத்தும் அருணகிரியின் வீட்டில் இருக்கிறது. அருணகிரி தான் ஆள் வைத்து என் சாமான்களைத் திருடிக் கொண்டு வரும்படி கூறியிருக்கிறான். இப்போது தனக்கு ஒன்றுமே தெரியாது என்கிறான். எனக்குத் தெரியாமல் திருடன் செய்த வேலை இது என்று சொல்கிறான். திருடன் தான் திருடிச் சென்ற பொருளைத் தன் வீட்டிற்குக் கொண்டு செல்லாமல் எங்கேயாவது மற்றவன் வீட்டில் வைப்பானா? இதிலிருந்து இவன் கூறுவது பொய் என்று உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரிகிறது. தங்கள் மெய்க் காவலன் என்ற மண்டை கர்வம். தன்னை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது என்று ஆணவம். பெருமுயற்சி செய்து இவன் வீட்டில்தான் என் வீட்டுச் சாமான்களைக் கண்டு பிடித்தேன்'' என்று பொருட்களைப் பறிகொடுத்தவன்


யார் இந்தப் பிரபலம்?



இவர் பெயருக்கு 'ஈடு இணையற்றவர்' என்று பொருள்.


மன்னரிடம் முறையிட, மன்னர் அருணகிரியைச் சிறையில் அடைக்கும்படி உத்திரவிட்டு, ''ராசப்பா! இனி நீதான் என்னோட உண்மையான மெய்க் காப்பாளன்'' என்று மன்னர் தன் முத்து மாலையை ராசப்பனின் கழுத்தில் போட, ராசப்பன் மகிழ்ச்சியோடு கழுத்தைத் தொட்டுப் பார்க்க...

திடுக்கிட்டு கண்களை விழிக்க எதிரே அவன் மனைவி தான் நீரை அவன் முகத்தில் தெளித்துக் கொண்டிருந்தாள். ''நல்லா தூங்கினீங்க போங்க. உங்களுக்கு ஒரு சேதி தெரியுமா? அருணகிரி நேத்து சுருக்கல்லே சொந்தக்காரங்க வீட்டிலே காதுகுத்து விழான்னு குடும்பத்தோட ஊருக்குப் போயிருக்காரு. வீட்டிலே வேலை செய்யற வயசான பெண் மணியைக் காவலுக்கு வச்சுருக்காரு. நேத்து ராத்திரி ஒரு திருட்டுப்பய அண்ணாச்சி வீட்டுக்குள்ளே புகுந்து வேலைக்காரியைக் கட்டிப் போட்டு, நகை, பண்டம் பாத்திரங்களை எல்லாம் சாக்கிலே போட்டுக் கட்டிக் கொண்டு போனானாம். என்ன ஆச்சர்யம் பாருங்க! அந்தத் திருட்டுப் பயலுக்கு நல்ல புத்தி வந்து தான் திருடிக்கிட்டு போன சாமான்களை மறுபடியும் அண்ணாச்சி வீட்டிலே அப்படியே வச்சுட்டானாம். திருடன் சாக்கு மூட்டையை வச்சுட்டு வெளியே வர்ற நேரத்திலே அண்ணாச்சி மாட்டு வண்டியிலே வீட்டு வாசலுக்கு வந்தாராம். அண்ணாச்சிய பார்த்த திருட்டுப் பய கொல்லை வழியா ஓடியே போயிட்டானாம். அவரால் திருடனைப் பிடிக்க முடியலே. நல்ல காலம் என் சாமான்கள் எனக்குக் கிடைச்சுதேன்னு சந்தோஷமா சொன்னாராம். ஊரே இதைப்பத்தி பேசிக்கிட்டிருக்கு. நீங்க என்னடான்னா திருடனைத் துரத்திப் பிடிச்ச மாதிரி அசந்து தூங்கிக்கிட்டிருக்கீங்க''என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்று விட்டாள்.



''படத்தைப் பார்த்து அ, ஆ, இ, ஈ காட்டுங்க பார்க்கலாம்!''
''போங்க டாக்டர், இது கூடவா உங்களுக்குத் தெரியாது!''
- ஆர்.ராஜசேகரன்

திடுக்கிட்டான் ராசப்பன். அப்படி என்றால்... அப்படி என்றால்... அருணகிரி வீட்டிலிருந்து திருடிக் கொண்டு வந்த திருடனை, மீண்டும் அவன் வீட்டில் வைக்கும்படி செய்திருக்கேன். தன் செயலை எண்ணி வெட்கப்பட்டான் ராசப்பன்.







அதிக மக்கள் கொண்டாடும் பண்டிகை!

* தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் நரகாசுரன் என்ற அரக்கன் அழிந்த தினமே தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது.


* வங்காளத்தில் காளி பூஜையாகக் கொண்டாடுகின்றனர். சும்பன், நிசும்பன் என்ற அரக்கர்களை, காளி தேவி சம்ஹாரம் செய்தார். அதன் பிறகும் தேவியின் வெறி அடங்காமல், தேவர் படையையும் நாசம் செய்ய ஆரம்பித்தார். காளி தேவியின் ஆவேசத்தை சிவபெருமான் அடக்கி வெற்றி கொண்ட நாளே தீபாவளியாக அங்கு கொண்டாடப்படுகிறது.

* மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேச மாநிலங்களில் மகாபலியின் சாம்ராஜ்ஜியத்தை, வாமனாவதாரம் எடுத்து மகாவிஷ்ணு வென்ற நாளையே தீபாவளியாகக் கொண்டாடுகின்றனர்.

* பஞ்சாப் மாநிலத்தில், நசிகேதனுக்கு, எமதர்மராஜன் உயிர்ப்பிச்சையும், சாவித்திரி தேவிக்கு புத்திர வரமும் அளித்த நாள்தான் தீபாவளி என்று கொண்டாடுகின்றனர்.

* மத்திய பிரதேசம், டில்லி, ராஜஸ்தான் ஆகிய இடங்களில், மகாவிஷ்ணு





பூலோகத்திற்கு வந்த நாளாக தீபாவளியைக் கொண்டாடுகின்றனர்.

* குஜராத் மாநிலத்தைப் பொறுத்த வரை ஸ்ரீகிருஷ்ணர் பூலோக வாழ்வை நீத்து, வைகுண்டம் ஏகிய நாளே தீபாவளி.

* ஜைன மதத்தினரும் தீபாவளி கொண்டாடுகின்றனர். மகாவீரர் முக்தி அடைந்த தினமாகக் கருதி, அன்று தீபாலங்காரம் செய்து, மகாவீரருக்குப்







பூஜை நடத்தி வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.

தீபாவளி கொண்டாடுவதற்கு விதவிதமான காரணங்கள் சொல்லப்பட்டாலும், ஆசியாவிலேயே அதிகமான மக்களால் கொண்டாடப்படும் ஒரே பண்டிகை தீபாவளிதான்!





கதை, ஓவியம் ச. காணிக்கைராஜ்—...



வாயில்லா ஜீவன் களுக்கு இன்று உணவு, நீர், ஓய்வு ஏதும் சரிவர இல்லா மற் போய்விடுமே... என்னால் அசையவு முடியலை... ம்...!
மழையோ வலுத்துக் கொண்டேயிருந்தது.
தன் சக்தியைத் திரட்டி ஒரு அடியாக சமாளித்து எழுந்தான் வேலன்...
மாடுக ளைப் பார்க்க ணும்!
அட என் செல்லக் குட்டிகளா!
வைக்கோற் போரையே
மேய்ந்துவிட்டு அதன் அடி மறைவிலேயே பாதுகாப்பாக ஓய்வு எடுக்கின்றனவே... பலே...!
வாயில்லாத ஜீவன்களிடந்தான்

என். சொக்கன்

ஓடாமலே டென்னிஸ்!

– விளையாட்டு



இதுவரை நாம் பார்த்த ஆட்டங்களெல்லாம் குழு ஆட்டங்கள். இப்போது பார்க்கப்போவது நேருக்கு நேர் மோதும் தனி நபர் ஆட்டம்.


டென்னிஸில் ஆட்டக்காரர்கள் இருவரும் எதிரெதிர் கோர்ட்டிலிருந்து விளையாடுவதுபோல் நீங்கள் இருவரும் எதிரெதிரே உட்கார்ந்து கொள்ள வேண்டும். முடிந்தால், நடுவில் ஒரு சிறிய அட்டைப் பெட்டியையோ அல்லது தலையணையையோ வைத்துக் கொள்ளலாம்.

முந்தைய 'ஓடாமல்' போட்டிகளெல்லாம், உங்கள் அறிவை மட்டும் சோதித்தன. இப்போது இந்தப் போட்டி, உங்களுடைய அறிவையும், ஒரே நேரத்தில் பல விஷயங்களில் கவனம் செலுத்தும் கூர்மையையும் சோதிக்கும்.

அதாவது, நிஜ டென்னிஸில் ஒரு வீரர் பந்தை அடிப்பதுபோல், நீங்கள் உங்களுடைய சக வீரரிடம் ஒரு பந்தைத் தூக்கிப்போட வேண்டும். அது உண்மையான பந்தாக இருக்கலாம். அல்லது ஒரு பேனாவாக இருக்கலாம். அல்லது ஒரு வீணான காகிதத்தைக் கசக்கி வீசினால்கூட பரவாயில்லை. ஆனால், ரொம்ப உயரத்திலும் போடாமல், ரொம்பக்

கீழாகவும் போடாமல், அவர் கேட்ச் பிடிக்கும்படி வீச வேண்டும்.

பொறுங்கள். அவசரப்



பட்டு கையிலுள்ள பந்தை வீசிவிடாதீர்கள். அந்தப் பந்தை வீசும் அதே நேரத்தில், நீங்கள் உங்கள் நண்பருக்கு ஒரு கேள்வி கேட்க வேண்டும்.

உங்களுடைய நண்பர், உங்கள் கேள்விக்கான பதிலை யோசித்தபடி அந்தப் பந்தைப் பிடிக்க வேண்டும். பந்து கீழே விழாமல் பிடிப்பதற்குள் கேள்விக்கு பதிலைச் சொல்லிவிட வேண்டும்.

இதுதான் முக்கியமான கட்டம். கேள்விக்கு பதிலைச் சொல்லி, அதன்பின் பந்தையும் சரியாகப் பிடித்துவிட்டால், உங்கள் நண்பருக்கு ஒரு பாயின்ட். இப்போது நீங்கள் அடுத்த கேள்வியைக் கேட்டு மீண்டும் பந்தை அவரிடம் வீச வேண்டும். இப்போதும் அவர் சரியாக பதில் சொல்லி, பந்தைப் பிடித்தால் இன்னொரு பாயின்ட். அப்படியில்லாமல், பதில் சொல்லி பந்தைக் கோட்டை விட்டாலோ, பந்தைப் பிடித்து விட்டு, பதில் சொல்



லாமல் இருந்தாலோ பாயின்ட் கிடையாது.

அப்படி அவர் சொதப்பிவிட்டால், அடுத்து உங்களுடைய முறை தொடங்கும். இப்போது அவர் கேள்வி கேட்டபடி பந்தை வீசுவார். நீங்கள் பதில் சொன்னபடி பந்தைப் பிடிக்க வேண்டும். பாயின்ட் சேர்க்க வேண்டும்!

உதாரணமாக :

ராமு : மதிய உணவுத் திட்டத்தை முதன்முதலாக அறிமுகப் படுத்திய தமிழக முதல்வர் யார்? (பந்தை வீசுதல்)

சோமு : காமராஜர் (பந்தைப் பிடித்தல் - சரியான விடை - ஸ்கோர் 0 - 1)

ராமு : பாகிஸ்தானின் சுதந்திர தினம் எப்போது? (பந்தை வீசுதல்)

சோமு : ஆகஸ்ட் பதினைந்து (பந்தைப் பிடித்தல் - தவறான விடை. ஆகவே, அடுத்த கேள்வியை சோமு கேட்க வேண்டும் - ஸ்கோர் 0 - 1)

சோமு : ஆழக் குழி தோண்டி, அதிலே ஒரு முட்டையிட்டு, அண்ணாந்து பார்த்தால், தொன்னூறு முட்டை - அது என்ன? (பந்தை வீசுதல்)

ராமு : தென்னை மரம் (பந்தைப் பிடித்தல் - சரியான விடை ஸ்கோர் 1 - 1)

இப்படியே ஆட்டம் தொடரும். உங்கள் இருவரில் யார் முதலில் ஆறு பாயின்ட் சேர்க்கிறீர்களோ, அவர்கள் ஒரு 'செட்' வென்று விட்டதாக அர்த்தம். தற்காலிகமாக ஆட்டத்தை நிறுத்திவிட்டு இருவரும் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். ஆளுக்கு ஒரு நகைச்சுவைத் துணுக்கு சொல்லி, நன்றாகச் சிரியுங்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம். ஒவ்வொரு செட் முடிந்ததும் வென்றவர், தோற்றவர் இருவருமே பூஜ்ஜியம் பாயின்ட்களுக்குத் திரும்பிவிட வேண்டும். மீண்டும் பழையபடி ஆட்டத்தைத் தொடங்கி, ஒவ்வொன்றாக பாயின்ட் சேர்க்க வேண்டும். சென்றமுறை பூவா, தலையாவில் வென்று முதலில் விளையாடியவர், இந்த முறை இரண்டாவதாக விளையாட வேண்டும்.


இப்படி இந்த ஆட்டத்தை மூன்று செட், ஐந்து செட், ஏழு செட் என்று விளையாடலாம். இறுதியில் யார் அதிக செட்கள் வென்றிருக்கிறார்களோ அவர்கள்தான் போட்டியில் வென்றதாக அர்த்தம்.

ஒருவேளை இருவருமே சம அளவு செட்கள் வென்றிருக்கும் போது, ஆட்டம் முடிந்துவிட்டால், கவலைப்படாதீர்கள். நண்பர்கள் இருவருமே வென்றதாகச் சொல்லி அன்போடு கை குலுக்கிக் கொள்ளுங்கள், வெற்றி, தோல்வியைவிட, அதுதான் முக்கியம்.


யார் இந்தப் பிரபலம்?



இவர் நாட்டிலேயே இவரது அம்மாதான் சொந்தமாக கார் வாங்கி அதை ஓட்டிய முதல் பெண்மணியாம்!




ரகு பட்டாசு வெடிக்க வழிகாட்டுங்கள்!





குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்:

1: பொங்கல் என்றால் நினைவுக்கு வருவது (4)
8. காய்க்கு அடுத்த நிலை (3)
11.தேசத் தந்தை (3)
12.திறமைசாலி வேறு பெயர் (4)
13.தேசம் (2)
14.மிதிவண்டி ஆங்கிலத்தில் (4)

வலமிருந்து இடம் :

2.பட்டாசு, புத்தாடையுடன் கொண்டாடும் பண்டிகை (4)
3.பாடல் இயற்றுபவர் (2)
5.பரிணாம வளர்ச்சிக் கொள்கையை வெளியிட்டவர் (4)
6.கலாட்டா என்பதை இப்படியும் சொல்லலாம். (3)
12.சகல விஷயங்களிலும் திறமையானவரை இப்படி அழைப்பார்கள் (4)
15. சிங்காரவேலர் கோயில் அமைந்திருக்கும் ஊர் (4)

மேலிருந்து கீழ் :

1.அரசரின் _____ யை மீற முடியாது (4)
2. ________ ஒரு பாவச் செயல் (4)
4.அன்றைய பாடத்தை அன்றே படித்தால் பேந்த பேந்த ________க்க வேண்டாம் (2)
7.________ க்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் (3)
9.காந்தியடிகள் _________ வழியில் விடுதலைக்காக பாடுபட்டார் (4)
10.முக்கனிகளில் ஒன்று (2)
11.கானகம் (2)
13.புதினம் (3)

கீழிருந்து மேல் :

3.திணைகளில் ஒன்று (3)
6.சூரியன் வேறு பெயர் (2)
15.வலை பின்னி வாழும் பூச்சி (4)

- கே.கலா, மன்னார்குடி

விடை: 95ம் பக்கம்





பராகுவேயில் வளரும் யுப டோரியம் ரெபாண்டியானம் என்ற தாவரம் உலகிலேயே மிக இனிப்பான தாவரம். ஆங்கிலத்தில் ஸ்டீவியா என்று குறிக்கப்படுகிறது. சர்க்கரையை விட 300 மடங்கு தித்திப்பானது. ஒரு கப் டீ அல்லது காபிக்கு இனிப்பு கொடுக்க ஒரு சொட்டு ஜூஸ் போதும். அந்நாட்டுப் பழங்குடியினர் அவ்வாறே அதை உபயோகிக்கின்றனர்.

- ஜெயஸ்ரீ மகேந்திரன்,
சங்கரன்கோவில்

மேற்கு இந்தியத் தீவுகளை முதன் முதலில் அடைந்த 'கொலம்பஸ்' என்ற கப்பலின் தலைவர் பெயரை இத்தாலிய நாட்டு மக்கள் 'கொலம்போ' என்று அழைத்தனர். இத்தாலிய மொழியில் அதற்கு 'சாதனை' என்றும் 'சமாதானப் பறவை' என்றும் பொருள்.

- கே.சுதர்ஷன்,
தூத்துக்குடி

கனடா நாட்டில் மான்ட்ரீல் நகரில் பூச்சிகளுக்கான கண்காட்சி அமைந்துள்ளது. இக்கண்காட்சியில் சுமார் 4½ லட்சம் பூச்சியினங்கள் இடம் பெற்றுள்ளன. ஆப்பிரிக்க வண்டுகள், முடி அடர்ந்த சிலந்திகள், சீறும் கரப்பான்கள் ஆகியவை உண்டு.

- நெ. இராமன்,
சென்னை

'கான்ஃபில்' என்பது அமெரிக்கக் காடுகளில் காணப்படும் ஒரு வகை சிலந்தி. இவை இரை தேடுவதற்காக குளம், குட்டைகளில் மூழ்கும். எப்படி தெரியுமா...? கனமான பொருள் ஒன்றைக் கவ்விக் கொண்டு




பூச்சிக் கண்காட்சி!

நீருக்குள் மூழ்கும். கீழே சென்று இரை தின்றதும், கவ்விய கனப் பொருளை விட்டுவிடும். உடல் கனம் குறைவதால் தானாக மேலே வந்துவிடும்.

- இரா.பிரசன்னா, கரூர்

உணவுப் பொருள்கள் உறைந்து போகாமல் பாதுகாத்து வைத்துக் கொள்வதற்காக எஸ்கிமோக்கள் ஃப்ரிஜ்ஜை பயன்படுத்துகிறார்கள்.

- லலிதா செல்லப்பா, சென்னை





முயல் தண்ணீர் குடிப்பதே கிடையாது. அது தன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள, அது சாப்பிடும் புல்லில் உள்ள தண்ணீரே அதற்குப் போதுமானதாக உள்ளது.

- ஜெ.ம.சதீஷ்குமார், பதினோராம் வகுப்பு, சிவகாசி அரிமா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சிவகாசி

மத்தாப்பு வெடிகளைச் சிலர் 'சீனி வெடி' என்று அழைப்பார்கள். அந்தக் காலத்தில் சீனாவில் இருந்து தான் மத்தாப்பு மற்றும் வெடி வகைகள் இந்தியாவுக்கு வந்தன. முதலில் சீனா வெடி என்றழைக்கப்பட்டு, பிறகு சீன வெடியாகி அதற்குப் பிறகு சீனி வெடியாக மாறிவிட்டது.

- சின்னஞ்சிறுகோபு, மயிலாடுதுறை



மர்மப் புத்தகம்!

"அப்துல்லா, நீ என்ன சொல்றே? எனக்குப் புரியவில்லை. மறுபடியும் சொல்" ராதிகா அதிர்ச்சியுடன் கேட்டாள்.

"ரஹீம், ஒரு பெரிய கொள்ளைக் கும்பலைச் சேர்ந்தவன். எகிப்தின் புராதன சொத்தான பண்டைய சிலைகள், நகைகள், கலைநயம் மிக்க பொருட்கள் இவற்றையெல்லாம் எங்கள் நாட்டிலிருந்து திருடி, அதை வெளிநாட்டினருக்கு விற்கும் ஒரு துரோகி என்றும் எனக்கு இப்பொழுதுதான் தெரிந்தது"- அப்துல்லா கோபத்துடன் கூறினான்.

"அது சரி, அக்பருக்கும் ரஹீமுக்கும் என்ன சம்பந்தம்? அவர் ஏன் ரஹீமை தொந்திரவு செய்கிறார்?" ராதிகா வினவினாள்.

"நான் கூறும் பதிலைக் கேட்டு நீங்கள் அதிர்ந்து போவீர்



கள். அக்பர் எங்கள் நாட்டு ரகசிய போலீஸில் ஒரு பெரிய அதிகாரி!'' என்றான் அப்துல்லா.

ராதிகாவும் ராஜுவும் அதிர்ச்சியடைந்தனர். ''எங்களால் நம்பவே முடியவில்லையே. எப்படி கண்டுபிடித்தாய்?'' ராஜு அவசரமாகக் கேட்டான்.

''கால்பந்து விளையாட்டு மைதானத்தில் அக்பர் ரஹீமிடம் தான் யார் என்று கூறியதை என் காதால் கேட்டேன்'' என்றான் அப்துல்லா.

''என்ன கூறினார்? சீக்கிரம் சொல்'' என்று



ராதிகா கேட்டாள்.

''சமீபத்தில் எங்கள் நாட்டிற்கு ஒரு ஃபிரெஞ்ச் நாட்டு ஆராய்ச்சி நிறுவனம் வந்துள்ளது. அவர்கள் எங்கள் நாட்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து பல ஆராய்ச்சிகள் செய்தனர். அப்பொழுது எங்கள் நாட்டுப் புராதன செல்வங்களான பல மம்மிகள், சிலைகள், தங்கம், வெள்ளி போன்றவை கிடைத்தன. இவற்றைக் குறித்து பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன'' என்றான் அப்துல்லா.

''ஆமாம், நானும் இந்தியாவில் படித்தேன். அதில் மிக அழகான ஒரு மம்மியின் படத்தையும் பார்த்தேன். சரி, மேலே சொல்'' என்றான் ராஜு.

''இவையெல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன் மண்ணில் புதையுண்டு போனவை. இப்பொழுது இவை எங்கள் நாட்டுச் சொத்து'' என்றான் அப்துல்லா.

''அவற்றையெல்லாம் காண மிகுந்த ஆவலுடன் இருக்கிறேன்'' என்றாள் ராதிகா.

''இரு ராதிகா, முழுக் கதையையும் கேள். அப்படி கண்டுபிடிக்கப்பட்ட ஏராளமான சிலைகளை ஒரு வெளிநாட்டுக் கொள்ளைக் கும்பலிடம் விற்பதற்காக இந்தத் தேசத் துரோகி ரஹீம் ஏற்பாடு செய்துள்ளான். அவற்றைப் பற்றிய குறிப்புகளை அவன் திருடிய பொழுது போலீஸிடம் மாட்டியிருக்கான். ஆனால் எப்படியோ ஒரு புத்தகக் கிடங்கிற்குள் ஓடி ஒளிந்து விட்டான்'' என்றான் அப்துல்லா.

''பார்த்தால் சாதுவாகத் தெரிகிறான். அவனுக்கு என்ன தைரியம் பார்'' என்றான் ராஜு. ''சீ, தன் பிறந்த நாட்டிற்கு துரோகம் செய்பவன் ஒரு கோழை'' என்று ராதிகா சொன்னாள்.

''புத்தகக் கிடங்கிற்குள், இந்தியாவிற்குச் செல்லும் ஒரு புத்தகக் கட்டுக்குள் இருந்த ஒரு புத்தகத்தில் அந்தக் குறிப்புகளை ஒளித்து வைத்து விட்டான். பிறகு அங்கிருந்து எப்படியோ தப்பிவிட்டான். ஆனால் அவனுடைய கூட்டாளி ஒருவன் போலீஸிடம் மாட்டிக் கொண்டான். அந்தக் கூட்டாளி பயந்து எல்லா உண்மைகளையும் போலீஸிடம் கூறிவிட்டான்'' என்று அப்துல்லா விவரங்களைக் கூறினான்.

''பிறகு என்ன? இந்த ரஹீ

யார் இந்தப் பிரபலம்?



ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் படித்த பெண்மணி.

மைப் பிடித்து போலீஸ் விசாரிக்க வேண்டியதுதானே?'' ராஜு ஆத்திரத்துடன் கூறினான்.

''ரஹீம் செய்து கொண்டிருக்கும் திருட்டுத் தொழிலுக்கு சாட்சி எதுவுமில்லை என்பதால் அந்தத் திருட்டுக் கும்பல் பற்றிய விவரங்கள் சேகரிக்க எங்கள் நாட்டு மிகப் பெரிய அதிகாரியான அக்பர் முன் வந்துள்ளார். அன்று அவர் பேசியதில் எனக்குப் புரிந்தது அதுதான்'' என்றான் அப்துல்லா.

''அது சரி, அதற்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்? எங்களை ஏன் அக்பர் விரட்டுகிறார்?'' என்று ராஜு கேட்டான்.

''ரஹீம் குறிப்புகளை ஒளித்து வைத்த புத்தகத்தைதான் நீ சென்னை புத்தகக் கண்காட்சியில் வாங்கியிருக்கிறாய். அந்தப் புத்தகம் தான் எகிப்து நாட்டு மர்மங்கள்!'' என்றான் அப்துல்லா.

''இது என்ன, ஒரு சினிமாக் கதை போல உள்ளதே. நாங்கள் ஏதோ சென்னையில் ஒரு புத்தகம் வாங்கப் போய் இப்படி மாட்டிக் கொண்டோமே. எங்களையும் திருட்டுக் கும்பல் என்று அக்பர் எண்ணி விடுவாரா? பயமாக உள்ளது'' என்றான் ராஜு.

''நமக்கு என்ன பயம்? நம்மிடம் உண்மை உள்ளது'' என்றாள் ராதிகா.


''சபாஷ்! இதுவரை அப்துல்லா கூறிய கதைகளைக் கேட்டு விட்டீர்கள். இனி அக்பர் வந்து உங்களைப் பிடிக்கும்முன் என்னுடன் வாருங்கள். உங்களைப் பாதுகாக்கிறேன்'' என்று ஒரு செடி மறைவிலிருந்து ரஹீம் வெளிப்பட்டான்.

''ராஜு, ராதிகா ஓடிவிடுங்கள். உங்களைப் பேராபத்து சூழ்ந்துள்ளது'' என்று அலறிக் கொண்டே அப்துல்லா ஓடத் துவங்கினான்.

ஒரே எட்டில் அவனைப் பிடித்துக் கொண்ட ரஹீம், மறுகணம் கைத் துப்பாக்கியை நீட்டியபடி கூறினான்: ''ஏய், என்னிடமிருந்து தப்பிக்க முயன்றால் சுட்டு விடுவேன். ஏறுங்க வண்டியில்.''

''ஐயோ, நாமெல்லோரும் இப்படி வெளிநாட்டில் ஒரு கொள்ளைக்காரனால் கடத்தப் பட்டு விட்டோமே! அம்மா, அப்பா தேடுவார்களே!'' என்று ராதிகா அழத் தொடங்கினாள்.

(தொடரும்)



''குரு ஏன் இப்படி பயந்து ஓடுகிறார்?''

''நான் சுவாமின்னு கூப்பிட்டது அவரது காதிலே சுனாமி என விழுந்திருச்சு போலிருக்கு!''

– எம்.ஹரிவிக்னேஷ்



அந்தக் காட்டில் பேசும் விலங்குகள், பறவைகள் உண்டு என்றறிந்த தாமு அவற்றைத் தேடிச் சென்றான். காட்டு வழியே பைக்கில் போய்க் கொண்டிருந்த தாமுவுக்குத் தண்ணீர் தாகம் எடுக்க, வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு எங்கேயாவது தண்ணீர் கிடைக்குமா எனத் தேடிச் சென்றான். அப்போது 'ரா ரா சரசகுராரா...' என அவன் பைக்கிலிருந்த தன் கைப்பையில் விட்டுப் போன செல்போன் அடித்து நின்றது. மரத்தின் மேலே இருந்து குரங்கார் இறங்கி வந்தார். அதை எடுத்தார். மரத்தின் மேல் ஏறி ஒரு நம்பரை டயல் செய்து பேசத் தொடங்கினார்.

எதிர்முனை : ஹலோ, நாங்க நிலா டீ.வி.யில இருந்து 'பாட்டு கேளுங்க' நிகழ்ச்சிக்காக பேசுறோம். நீங்க யாரு பேசறது?

குரங்கார் : நான் குரங்கு பேசறேன்.

எதிர்முனை : ஐய்யய்யோ, இப்படி ஒரு பேரா?

குரங்கார் : ஆமா, எங்க வீட்டுல எல்லாருக்கும் இதே பேருதான்.

எதிர்முனை : எல்லாருக்குமா?

குரங்கார் : ஆமா, எங்க பரம்பரைக்கே ஒரே பேருதான்.

எதிர்முனை : பரம்பரைக்கேவா! அப்ப உங்க வீட்டுல பெயாக் குழப்பம் வராதா?

குரங்கார் : வராதே! ஏன் வரும்?

எதிர்முனை : ஏய் குரங்கு, பல் தேய்ச்சிட்டியான்னு உங்க அப்பா கேட்டா யாரைக் கேக்குறார்னு குழப்பம் வராதா?

குரங்கார் : ஆமா எதுக்கு பல் தேய்க்கணும்? இதுவரைக்கும் நாங்க யாருமே தேய்ச்சது கிடையாதே!

எதிர்முனை : உவ்வே... சரி நீங்க எங்க இருந்து பேசுறீங்க?

குரங்கார் : மரத்துல இருந்து!

எதிர்முனை : ஐயோ, நீங்க ரொம்ப வாலாட்டுறீங்க!

குரங்கார் : ஆமா, எப்படி கண்டுபிடிச்சீங்க?

எதிர்முனை : அதான் நீங்க பேசுறதிலேயே தெரியுதே! சரி, உங்களுக்குப் பிடிச்ச ஹீரோ யார்?

குரங்கார் : ஆஞ்சநேயர்!

முகில்

எதிர்முனை : அப்படி ஒரு நடிகரா! எனக்குத் தெரியவே தெரியாதே! சரி, உங்களுக்கு என்ன பாட்டு வேணும்?

குரங்கார் : எனக்கு எதுக்குப் பாட்டு? வாழைப் பழம்தான் வேணும். தா...

அதற்குள் போன் 'கட்' டாக, கோபமடைந்த குரங்கார் செல்போனை தூக்கி எறிய, அது குளத்தின் அருகில் படுத்துக் கிடந்த முதலையாரின் அருகில்



ஹலோ யார் பேசறது?



சென்று விழுந்தது. முதலையும் அதே எண்ணை ட்யல் செய்து பேசியது.

எதிர்முனை : ஹலோ, வணக்கம்! நாங்க நிலா டி.வி. 'பாட்டு கேளுங்க' நிகழ்ச்சிக்காக பேசுறோம். உங்க பேரு என்ன 'முதல்ல' சொல்லுங்க?

முதலையார் : முதலை!

எதிர்முனை : அதாங்க பேரு என்னன்னு 'முதல்ல' சொல்லுங்க!

முதலையார் : அதான் முதலை.

எதிர்முனை : ஐயோ... இப்படியெல்லாமா பேரு வைப்பாங்க? சரி, விடுங்க. எங்க இருந்து பேசறீங்க?

முதலையார் : இப்ப நிலத்

துல இருந்து பேசுறேன். இன்னும் கொஞ்ச நேரத்துல தண்ணிக்குள்ள போயிடுவேன்.

எதிர்முனை : ஓ... குளிக்கப் போறீங்களா! சரி, நீங்க என்ன நிகழ்ச்சி விரும்பிப் பார்ப்பீங்க?

முதலையார் : அதெல்லாம் பார்க்கறது கிடையாது. அடிக்கடி டிஸ்கவரி சேனல், அனிமல் பிளானெட்ல எல்லாம் நடிச்சிருக்கேன்.

எதிர்முனை : வாவ்! ஓகே உங்களுக்காக 'தனிக்காட்டு ராஜா' படத்துல இருந்து ஒரு பாட்டுப் போடுறோம்.

முதலையார் ஸ்டைலாக செல்போனை தூக்கிப் போட அது யானையாரிடம் சென்று விழுந்தது.

யானையார் ஏதோ ஒரு எண்ணை டயல் செய்து பேசினார்.

எதிர்முனை : ஹலோ ஹோட்டல் சுகம் பவன்.

யானையார் : எனக்குப் பசிக்குது.

எதிர்முனை : அதுக்குத்தானே சார் நாங்க ஹோட்டல் நடத்துறோம். என்ன சார் வேணும் உங்களுக்கு? உங்க வீட்டுக்கே வந்து டெலிவரி பண்ணிடுறோம்.

யானையார் : கரும்பு இருக்கா?

எதிர்முனை : ஐயோ... கரும்பு ஜூஸ் நாங்க விக்கிறதில்லையே! வேற என்ன வேணும்?

யானையார் : சாப்பிட இலை இருக்கா?

எதிர்முனை : என்ன சார் இது, எவ்வளவு பெரிய ஹோட்டல் நடத்துறோம்! இலை கூடவா கொடுக்க மாட்டோம். உங்களுக்கு வேணும்னா இன்னொரு இலை எக்ஸ்ட்ராவா கொடுத்து விடுறேன் சார்.

யானையார் : அப்ப ஒரு 40 கிலோ இலை கொடுத்து விடுங்க.

எதிர்முனை : 40 கிலோவா...?

போன் இதோடு 'கட்' ஆகிவிட யானை அதை அலட்சியமாகப் போட்டுவிட்டுப் போய்விட்டது.

தாமு தன் செல்போனைத் தேடி அலைந்தான். அவன் செல்போனில் அழைப்பு வர மீண்டும் 'ரா ரா சரசகுராரா' ஒலிக்க, சத்தம் வந்த திசையை நோக்கி ஓடி வந்து செல்லை எடுத்தான். அந்த ஹோட்டல்காரர் பேசினார் :

ஹோட்டல்காரர் : சார், நாற்பது கிலோ இலையை ரெடி பண்ணிட்டேன். எங்க அனுப்பணும்?

தாமு : நாற்பது கிலோ இலையா? நான் எப்ப கேட்டேன்?

ஹோட்டல்காரர் : யோவ், என்ன விளையாடுறியா..? நீதானே கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இந்த நம்பர்ல இருந்து போன் பண்ணி இலை கேட்டே?

தாமு : என்னைப் பைத்தியக்காரன்னு நினைச்சுட்டியா...?

(சண்டை தடபுடலாகத் தொடர்கிறது...)

யார் இந்தப் பிரபலம்?



சொந்த நாட்டை விட்டு தொடர்ந்து லண்டனில் வாசம் செய்யும்படியான நிலை.





மகிழ்ச்சியான தீபாவளி!

தீபாவளி என்றாலே எல்லோருக்கும் சந்தோஷம் வந்து விடும். அந்தத் தீபாவளியை பாதுகாப்போடு கொண்டாடினால் பண்டிகையின் மகிழ்ச்சி இரட்டிப்பாகும். உங்களுக்காக ஒரு ஜாலியான விளையாட்டு 48-49ம் பக்கங்களில் காத்திருக்கிறது!

இந்த விளையாட்டுக்கு குறைந்தது இரண்டு பேர் தேவை. அதிகப்பட்சம் நான்கு பேர் விளையாடலாம். சோழி அல்லது தாயக் கட்டையைப் பயன்படுத்துங்கள். ஆளுக்கு ஒரு காயை வைத்துக் கொள்ளுங்கள்.

தாயம் போட்டு ஆட்டத்தைத் துவக்க வேண்டும்.

3. பெரியவர்களின் துணையுடன் பட்டாசு வெடிக்கிறீர்கள். 5க்குச் செல்லுங்கள்.
7. பிராணிகளுக்கு அருகில் பட்டாசு வெடிக்கக் கூடாது. ஓர் ஆட்டம் கிடையாது.
10. கண்களுக்கு விருந்தாகும் கம்பி மத்தாப்பூ, புஸ்வானம் வெடித்தல். இன்னொரு ஆட்டம் நீங்களே ஆடவும்.
14. காதைப் பிளக்கும் அதிக சத்தமான வெடி. ஆட்டத்தை விட்டு வெளியேறுங்கள். (மீண்டும் தாயம் போட்டுத் துவங்க வேண்டும்)
18. பட்டாசு வெடிக்கும்போது இறுக்கமான ஆடைகளை அணிகிறீர்கள். நல்லது, 20க்குச் செல்லுங்கள்.
22. டிராயர், சட்டை பாக்கெட்களில் பட்டாசு வைத்திருக்கிறீர்கள், ஆபத்து! தாயம் போட்டால்தான் அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியும்.
26. வெடிக்கும்போது பக்கெட்டில் தண்ணீர் வைத்திருக்கிறீர்கள். 28க்குச் செல்லவும்.
30. வெடிகளை நீங்களே மிக்ஸ் பண்ணக் கூடாது. 15க்குச் செல்லவும்.
32. வீட்டுக்கு வெளியே வெடித்தல். சபாஷ்! 33க்குச் செல்லுங்கள். நீங்களே வெற்றி பெற்றவர்கள் மகிழ்ச்சியான தீபாவளி!



துப்பறியும் துஷ்யந்த்!
4
கதை: மாயூரன்
படம்: ராம்கி
நேராக அவர்களைக் காவல் நிலையத்துக்கு அழைத்துப் போனான் துஷ்யந்த்.
துஷ்யந்த், அப்பா வெளியே போயிருக்காரே!
ரைட்டர் சார், நான் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.
யாரு இவங்கள்ளாம்?
எங்களுடைய குடும்ப நண்பர். ஆட்டோ ரிஷக்ஷாவில் நகை, ரொக்கப் பணம் அடங்கிய கைப் பெட்டியைத் தவற விட்டுட்டார்...
எப்போ, எங்கே, எந்த இடத்திலே ஆட்டோவில் ஏறினீங்க?


மயிலாப்பூர்ல மாலை 6.10க்கு ஆட்டோவில் ஏறினோம். நம்பர் TNC-6666, டிரைவர் பெயர் சாமிக்கண்ணு. வலது நெற்றியிலே பெரிய தழும்பு இருக்கும்.
இவ்வளவு டீடெய்ல்ஸ் கொடுத்திட்டீங்களே, அரை மணியில் பெட்டி வந்திடும். நீங்க வீட்டுக்குப் போங்க.
அவர்கள் வீட்டை அடைந்த சிறிது நேரத்துக்குள் காவலர் ஒருவரோடு அந்த ஆட்டோ டிரைவர் வந்தார்.
பெட்டியை வண்டியிலே வுட்டுப்பூட்டிங்க. நானே இட்டாரலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே ஐயா வந்திட்டாங்க.


எல்லாம் சரியாக இருக்கு. போன உயிர் திரும்பின மாதிரி இருக்கு.
எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலே!
துஷ்யந்த் கொடுத்த விவரங்களாலேதான் வண்டியைச் சீக்கிரமா மடக்க முடிஞ்சுது!
துஷ்யந்த் வீட்டில் -
எப்படிடா துஷ்யந்த் உனக்கு இவ்வளவு திறமை வந்தது!
எல்லாம் அப்பா கற்றுக் கொடுத்த பாடம்.
அப்பாவுக்குத் தெரிந்தால் ரொம்ப சந்தோஷப்படுவார்.
இப்ப எதுவும் சொல்ல வேண்டாம் ப்ளீஸ்.
கீதா, உன்கிட்டே கொஞ்சம் தனியாகப் பேசணும். மாடிக்கு வா..


உன் தோழி வசந்தி தொழிலதிபர் சந்திரசேகரனின் மகள் தானே?
ஆமாம். ஏன்?
அவள் போட்டோ அப்பாவிடம் விசாரணைக்கு வந்திருக்கு.
என்ன விசாரணை?
அதுதான் புரியலை. அவளுடைய அப்பாவே போட்டோவைக் கொடுத்து அனுப்பியிருக்கார்.
போன ஞாயிற்றுக் கிழமை வசந்தியைத் தியேட்டரில் பார்த்தேனே!
யாரோடு வந்திருந்தாள்?
நானும் அவளும்தான் போனோம். போலீஸ் விசாரணை பற்றி எதுவும் சொல்லலையே!
(தொடரும்)

மகிழ்ச்சியான தீபாவளி!



விளக்கம் 43 ஆம் பக்கம்



29
28
27
26
25
24
23
22
21
20
19
18
17
16
15
14
13
12

நன்றி!

ஒரு முறை மாவீரன், நெப்போலியன் வெளியூரில் இருந்தார். அவர் வறுமையால் வாடிக் கொண்டிருந்த நேரம். ஒரு நாள் கடிதம் ஒன்று அவருக்கு வந்தது.

நெப்போலியன் தாய், தானும் அவரின் உடன் பிறந்தவர்களும் வறுமையால் வாடுவதாக எழுதிய கடிதம் அது. அனலில் பட்ட புழுவாகத் துடித்த அவருக்கு, ஆறுதலாக எங்கிருந்தோ அவரைக் காண வந்தான், 'தெமாஸிஸ்' என்ற நண்பன்.

விஷயம் அறிந்ததும், 'தெமாஸிஸ்', தன்னிடமிருந்த ஆறாயிரம் டாலரைத் தந்தான். நண்பனைக் கடந்த 15 ஆண்டுகளாகத் தேடித் தேடி அலுத்துப் போனார் ஃபிரான்ஸ் நாட்டுப் பேரரசனாக உயர்ந்த மாவீரன் நெப்போலியன். 'காலச் சக்கரம்' சுழன்றாலும் அதன் உள்ளே 'நன்றி' எனும் ஓர் அச்சாணி நடுநாயகமாக நிலைத்து நின்றது.

ஒரு நாள், தன் நண்பனைக் கண்டே விட்டார். அன்பொழுக அவருக்குத் திருப்பித் தந்தது அறுபதாயிரம் டாலர்.

- மு.முரளீதரன்,
சென்னை

கண்களை மூடி...

சர்ச்சில் ஒரு நாய்க் குட்டியைப் பிரியமாக வளர்த்து வந்தார். அது எப்போதும் அவருடனேயே இருக்கும். ஒரு நாள் அவர் தொலைக்காட்சியில் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும்போது அந்த நாடகத்தை அவரது நாயும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு காட்சியின்போது சர்ச்சில் நாயின் கண்களைப் பொத்தினார். அவரது செல்ல நாய் பார்க்க வேண்டாம் என்று அவர் மறைத்தது நாய் இறந்து போகும் காட்சியாகும்.

- இரா.பாலு,
வரக்கால்பட்டு

* நெப்போலியன்



உப்புமா...

கி.வா.ஜ. சிறுவனாக இருந்தபோதே சிலேடையாகப் பேசுவதில் வல்லவராக

விளங்கினார்.

ஒருநாள் அவருடைய தாய், முந்தைய தினம் செய்து மீதமாகி இருந்த உப்புமாவைக் கொடுத்து அதைத் தின்னும்படி கி.வா.ஜ.வை வற்புறுத்தினார்.

* சர்ச்சில்



தொண்டையில் ஊசி!

கி.வா.ஜ.வோ சாப்பிடாமல் அடம் பிடித்தார்.

உடனே தாய் கோபமாக, ''உப்புமாவைத் தின்ன முடியவில்லையா... அது தொண்டையில் குத்துகிறதோ...?'' என்று கேட்டார்.

அதற்கு கி.வா.ஜ., ''ஆமாம். தொண்டையில் குத்துகிறது. ஏனெனில் ஊசியிருக்கிறதே...!'' என்றார்.

- குட்டி பிரசன்னா, கரூர்

கடிதம்...

ஒருநாள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (தமிழ் தாத்தா உ.வே. சாமிநாத ஐயரின் ஆசிரியர்) அவர்களுக்கு லண்டனில் இருந்து ஒரு கடிதம் வந்தது. இது நடந்தது, 1875 வாக்கில், சுமார் 130 வருடங்கள் முன்பு. அப்போது நவீன தபால் துறை ஆரம்பமான காலகட்டம். அந்தக் கடிதத்தில் 'மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, இந்தியா' என்று மட்டும் விலாசத்தில் எழுதியிருந்தது. அந்தக் கடிதம், அப்போது மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தங்கியிருந்த திருவாவடுதுறை என்ற தஞ்சை மாவட்ட சிற்றூரில் உள்ள ஆதீனத்திற்கு மிகச் சரியாக வந்து சேர்ந்துள்ளது! பின்கோடு, வீட்டு எண், தெருப் பெயர், ஊர், அஞ்சலகம் போன்ற விவரங்கள் எதுவும் இல்லாமலேயே 130 வருடங்கள் முன்பு அந்தக் கடிதம் மிகச் சரியாகப் போய் சேர்ந்துள்ளது.

- ஐஸ்வர்யா, சென்னை



நட்பா, பகையா?


கிருஷ்ண தேவராயர் சிற்றரசர்களையெல்லாம் தம் சபைக்கு வரும்படி உத்தரவிட்டிருந்தார். ஒருவர் மட்டும் உடல்நலக் குறைவினால் தன் மந்திரியை அனுப்பியிருந்தார்.

ராயர் அந்த மந்திரியிடம் ''உமது அரசனை உடனே வரவழையுங்கள்'' என்றார். அந்த அமைச்சரும் தமது அரசருக்கு அந்தரங்கமாக ஓலை அனுப்பி 'நான்கு காதம் தள்ளி மாறுவேடத்தில் இருங்கள். நான் அழைத்தபிறகு விஜய நகரம் வந்தால் போதும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

ஒரு நாள் அரசவையில் ஆற்றலுடைய மூன்று நர்த்தகிகள் நடனமாடினர். ஒரு வாரமாகியும் அரசர் பரிசளிப்பதாயில்லை. மூவரும் கோபம் கொண்டனர். ஒருத்தி ''இந்த மன்னரின் குணம் வேரும் விறகுமடி'' என்று பாடி அபிநயித்தாள். அடுத்தவள் ''இல்லையில்லை! முள்ளும் முரடுமடி'' என்றாள். மூன்றாமவள் ''கல்லும் காடு மாக்கும்'' எனப் பாடினாள்.

ராயர் சினத்தோடு எழுந்து




மாலதி

''இம்மூவரையும் சிறையிலடை யுங்கள்'' என, அரசரின் சார்பாக வந்த மந்திரி எழுந்து, ''அரசே! உங்களைப் போற்றியவர்களைத் தண்டிக்கலாமா?'' எனக் கேட்டார்.

''நீ என்ன சொல்கிறாய்? இவர்கள் என்னைப் புகழ்ந்தார்களா, எப்படி?'' என்று கேட்டார்.

மூன்று நாட்டிய தாரகைகளும் நடுங்கியபடி நின்றிருந்தனர். ''மன்னா! விறகைப் போல் உறுதியும், அடியில் வேரையும் கொண்ட கரும்பு போன்றவர் நம் மன்னர் என்றாள் ஒருத்தி. இல்லை, மேலே முள்ளும் முரடுமாயிருக்கிற பலாப்பழம் நம் வேந்தர்' என்றாள் அடுத்தவள். மூன்றாமவளோ 'கல்லைப் போன்ற உருவத்தையும் கரடுமுரடாயிருக்கின்ற கற்கண்டைப் போன்றவர் நம் கொற்றவர்'' என்கிறாள். இதற்கா ஜெயில் வாசம்?'' என்று விளக்கினார்.

மன்னர் மகிழ்ந்து பொன்னையும் பொருளையும் மூவருக்கும் வாரி வழங்கினார்.

ராயர் அந்த மந்திரியிடம் ''உங்கள் அரசர் ஏன் இதுவரை என்னை வந்து சந்திக்கவில்லை?'' என்று கேட்டார்.

''மன்னா! தாங்கள் என்னிடம் 'உனது அரசரை உடனே வரவழை' என்று சொல்லும்போது உங்கள் எதிரே ஒருவன் இறந்த ஆட்டின் தோலை உரித்துக் கொண்டிருந்தான். எங்கள் வேந்தரையும் கடுமையாக தண்டிப்பீர்களோ என்று அஞ்சினேன். இப்போது மிட்டாய்க் கடைக்கெதிரில் நின்று கேட்கிறீர்கள். அனுமதித்தால் எம் மன்னரை அழைக்கிறேன்'' என நயமாகக் கூறினார் அமைச்சர்.

ராயர் சிரித்தபடி ''என்னவொரு மதிநுட்பம்! உமது சாமர்த்தியமான பேச்சுக்காக உமது மன்னரை மன்னிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. இன்று முதல் நீங்கள் தான் எனது முதல் மந்திரி'' என்றார். அந்த மந்திரிதான் அப்பாஜி.

அப்பாஜியை மந்திரியாக்கியது ராணிக்குப் பிடிக்கவில்லை. தன் தம்பியை அமைச்சராக்கவில்லை என்று அவளுக்குக் குறை.

ராயர் அப்பாஜியையும் மைத்துனனையும் அழைத்தார். ஆளுக்கு ஒரு பொட்டலத்தைக் கொடுத்து சிந்து தேசத்துக்கும், மகத நாட்டுக்கும் அனுப்பி வைத்தார். அந்தப் பொட்டலங்களில் கரிய சாம்பலும் சில முடிக்கற்றைகளும் இருந்தன.

மகத தேச மன்னரிடம் அப் பொட்டலத்தைக் கொடுத்து

யார் இந்தப் பிரபலம்?



தன் அப்பாவைப் போல இவரும் அதே உயர்பதவியை வகித்திருக்கிறார்.

கிருஷ்ண தேவராயர் அனுப்பிய தாகக் கூறினான் மைத்துனன். அதை மகத மன்னர் பிரித்துப் பார்த்தார்.

"இதற்கு என்ன அர்த்தம்?" என்று கோபமாகக் கேட்டார் அரசர். ராயரின் மைத்துனன் பேந்தப் பேந்த விழித்தார்.

"நீங்கள் என் முடிக்குச் சமானம். எதிர்த்தால் சாம்பலாக்கி விடுவேன் என்று சூசகமாகச் சொல்லியிருக்கிறார் ராயர்" என்றார் குல குரு.

எரியும் சினத் தீயில் எண்ணெய் வார்த்தாற்போலாகிவிட்டது குலகுருவின் விளக்கம்.

"விஜய நகரத்தை சாம்பலாக்கி, ராயரை மொட்டை அடிப்பேன் என்று போய்ச் சொல்" என்று சொல்லி அனுப்பிவிட்டு படை திரட்டிக் கொண்டு புறப்பட்டான்.

சிந்து தேசம் சென்ற அப்பாஜி ராயர் கொடுத்த பொட்டலத்தைத் தங்கப் பேழையில் வைத்து, மங்கல வாத்தியம் முழங்க, மங்கையர் சாமரம் வீச அரசனிடம் சேர்ப்பித்தார்.

பொட்டலத்தைப் பிரித்த சிந்து அரசன் "இதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டான். பொட்டலம் அரக்குமுத்திரை இடப்பட்டிருந்ததால் அதில் என்ன இருந்தது என்று அப்பாஜிக்கு முன்னரே தெரியாது.

"மன்னா! எங்கள் வேந்தர் லோக சௌக்கியத்திற்காக ஒரு வேள்வி நடத்தினார். அந்த யாகத்தை நடத்தியவர்கள் பஞ்சவடி எனப்படும் மயிர்க்கற்றையைப் பூணூலாக அணியும் மாவிரத முனிவர்கள். பிரசாதமாக அவர்



"காய்கறி வந்தால் கூப்பிடும்மா..."

"கூப்பிட்டேம்மா. வரமாட்டேங்குது!"

- ஆர்.பிரியதர்ஷினி

பூணூலின் ஒரு பகுதியும், யாக சாம்பலும் தங்களின் க்ஷேமம் கருதி அனுப்பியிருக்கிறார்" எனப் பணிவோடு கூறினார்.

சிந்து மன்னன் பூளங்காகிதமடைந்து ராயருக்கும், அப்பாஜிக்கும் பல சன்மானங்களைக் கொடுத்தார். அதே சமயம் விஜய நகரத்தின் மீது மகத மன்னன் படையெடுத்து வந்திருப்பதால அப்பாஜியை விரைந்து நாடு திரும்பும்படி ராயர் தூது அனுப்பியிருந்தார்.

சிந்து அரசன் படைகளோடு வந்து மகத மன்னனை விரட்டியடித்தான்.

ராணியிடம் ராயா "இருவரிடமும் ஒரே பொருளைத்தான் கொடுத்தனுப்பினேன். உன் தம்பி கொண்டு வந்தது பகையை. அப்பாஜி கொண்டு வந்தது நட்பை. மந்திரிப் பதவிக்கு யார் பொருத்தமானவர் என்று இப்போதாவது புரிந்து கொண்டாயா?" என்று கேட்க, ராணி மௌனமாக இருந்தாள்.


1000/- ரூபாய் பரிசுப் போட்டி

இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 20.11.2005

I. பதில் என்ன?

1. தாஜ்மஹால் எங்குள்ளது?
2. எந்த ஆற்றின் கரையில் அமைந்துள்ளது?
3. இதைக் கட்டியவர் யார்?
4. யார் நினைவாகக் கட்டினார்?
5. தாஜ்மஹால் சுற்றுச் சூழல் பாதிப்பால் மங்கி வருகிறதா?



II. கடல் பிராணிகளின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.













லாப்ஸ்டர், கடல் வெள்ளரி, ஈல், கடல் குதிரை, கோல்டன் ஃபிஷ், கடல் பாம்பு

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



4. முகம் பார்க்க உதவும்
5. விழுதுகளைக் கொண்டது
6. பார்க்க, கேட்க உதவும்

- நெ.பிரஜோற்பத்திகலை,
புவனகிரி

III. இந்தக் கடிகாரத்தை மூன்று பாகங்களாக பிரித்தால் அதன் கூட்டுத் தொகை



பானையில் இருந்த பொற்காசுகள் எத்தனை?

I. ஒரு பானை நிறையப் பொற்காசுகள் இருந்தன. அவற்றை இரண்டு பேருக்குப் பங்கிடும் போது மீதி வந்தது. 3, 4, 5, 6 பேருக்குப் பங்கிடும் பொழுதும் மீதி வந்தது. 7 பேருக்குப் பங்கிடும்போது மீதி வரவில்லை, எனில் பானையிலிருந்த மொத்தக் காசுகள் எவ்வளவு? ஒவ்வொருவருக்கும் எவ்வளவு காசுகள் கிடைத்தன?

- கே. பாலசுப்ரமணி,
பதினோராம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி, நல்லூர்

II. 1. தமிழ் மாதத்தின் பெயர்
2. தங்கத்தை இவ்வாறும் கூறுவர்
3. நெல் விளையும் இடம்

சரிசமமாக வரும். அது எப்படி?

- கோ.இராகவிஜயா,
நெய்வேலி

IV. தன் நண்பனின் வீட்டுக்கு முதன் முதலாக நுழைந்த ஒருவர் அங்கு மாட்டியிருந்த புகைப்படம் ஒன்றைக் காட்டி ‘இது யாருடைய புகைப்படம்?’ என்று கேட்டார்.

அதற்கு அவர், ‘‘எனக்கு அண்ணனும் கிடையாது, தம்பியும் கிடையாது. அக்காவும் கிடையாது, தங்கையும் கிடையாது. நான் இரட்டைக் குழந்தைகளுள் ஒருவனாகவும் பிறக்கவில்லை. ஆனால் இந்தப் படத்தில் உள்ளவனின் தந்தை என் தந்தைக்கு

மகனாகிறான்'' என்று விளக்கம் தந்தார்.

அப்படியானால் அந்தப் படத்தில் உள்ளவர் யார்?

- குட்டி பிரசன்னா, கரூர்

V. பேனா ஒன்றின் விலை 5 ரூபாய். சாக்லேட் ஒன்றின் விலை 75 பைசா. லேபிள் ஒன்றின் விலை 25 பைசா. பாபு 100 ரூபாய் கொண்டு சென்று இந்த மூன்று பொருள்களையும் வாங்கினான். 100 ரூபாயில் மீதமின்றி அவன் வாங்கிய பொருள்களை எண்ணிப் பார்த்தான். மொத்தப் பொருள்களின் எண்ணிக்கையும் 100ஆக வர வேண்டும் பொருள்களின் விலையும் 100 ரூபாயாக இருக்க வேண்டும். எங்கே நீங்கள் கண்டு பிடியுங்களேன்!

- மா.கண்ணன், இராஜபாளையம்



VI. ஒரு முதலாளி தன் கணக்கரிடம் 1000/- ரூபாயையும், பத்து பைகளையும் கொடுத்து அந்த ஆயிரம் ரூபாயைப் பத்து பைகளில் கட்ட வேண்டும். கட்டியபின் தான் கேட்கும் ரூபாய்களை, பைகளை அவிழ்க்காமல் கட்டியபடியே தரவேண்டுமென்றும், (அதாவது ரூ.100/- கேட்டாலும் பையாகவே தரவேண்டும், ரூ.500/-கேட்டாலும் பையாகவே தரவேண்டும். ஆனால் 3,4,5 பைகளாக கொடுக்கலாம்) ஆனால் பையை அவிழ்க்கவே கூடாது என்றும் சொன்னார். அவர் விரும்பியவாறே கொடுப்பதானால் ஒவ்வொரு பையிலும் எவ்வளவு ரூபாய் கட்ட வேண்டும்?

VII. நான்கு எழுத்துகளாலான ஊரின் பெயர். முதலாவது எழுத்து நீரில் உண்டு, நிலத்தில் இல்லை. இரண்டாவது எழுத்து நிலத்தில் உண்டு, நீரில் இல்லை. மூன்றாவது எழுத்து கிழமையில் உண்டு, வாரத்தில் இல்லை, நான்காவது எழுத்து சரியில் உண்டு, பிழையில் இல்லை. அந்த ஊரின் பெயர் என்ன?

- கி.வெங்கடேஷ், ஆடுதுறை

விடைகள் : 95-ஆம் பக்கம்

போவோமா புது உலகம்!







இத்தாலி என்றதும் நம் நினைவுக்கு வருபவை, ரோமானியப் பேரரசுகளும் அதன் பழங்கால நாகரிகமும். உலகுக்கே முன்னோடியான ஜனநாயக மரபு, முதல் பார்லிமெண்ட், ஐரோப்பிய நாடுகளுடனான தொடர் போர்கள், எழில் கொஞ்சும் ஆல்ப்ஸ் மலைத் தொடர்கள், உலகின் நெஞ்சை உலுக்கிய பாசிசமும் அதனை உருவாக்கிய முசோலினி, உலகின் மிகச் சிறிய நாடான வாடிகன், போப், வெனிஸ் நகரம், அதன் வியாபார யுக்திகள் என இத்தாலியின் சிறப்புகளுக்கு எல்லையே இல்லை. இந்தியாவைவிட சிறிய நாடு; பத்து இத்தாலி சேர்ந்தால்தான் ஓர் இந்தியாவாகும்!


இத்தாலி, தெற்கு ஐரோப்பாவிலுள்ள ஒரு குடியரசு நாடு. இத்தாலிக்குள்ளேயே 'வாடிகன்', 'சான்மரீனா' போன்ற சிறிய நாடுகள் உள்ளன. கத்தோலிக்க மத குரு போப் ஆண்டவர் வாழும் 'வாடிகன்' நகரம், ரோம் நகரத்திற்குள் அடக்கம்.

ரோம், இத்தாலியின் தலை நகரம் மட்டுமில்லை; பெரிய நகரமும் இதுதான். செழிப்புமிக்க ஃப்ளாரன்டைன் மாளிகை மத்திய

இத்தாலியில் உள்ளது. ஐரோப்பிய மறுமலர்ச்சியின் பிறப்பிடம் இதுவே! நிறைய கலைஞர்களை, எழுத்தாளர்களை, சிற்ப வல்லுநர்களை ஈர்த்த சரித்திர புகழ்பெற்ற இடம்தான் ஃப்ளாரன்டைன்! இதன் எட்டு பக்க மேற்கூரை உள்ள 'டியூமா' என்ற தேவாலயம், 'பிலிங்கோ புருனச்சி'யால் வடிவமைக்கப்பட்டு, 1434ல் கட்டி



ஜனநாயகத்தின் பிறப்பிடம்!





முடிக்கப்பட்டது. 1966ல் பெருக்கெடுத்த 'ஆர்னோ' ஆற்றின் வெள்ளம் ஃப்ளாரன்டைன் நகரை மூழ்கடித்து, கலை வேலைப்பாடுகளைச் சிதைத்தது



"என்னைச் செருப்பு கடிச்சிருச்சு."
"உடனே போய் செருப்பை நன்றாக கவனிச்சுக்கோ!"
- எம்.ஹரிவிக்னேஷ்

இத்தாலியில் மெலின், நேப்பிள்ஸ், மெஸ்லினா போன்ற பெரிய நகரங்களும், 'வெனிஸ்' என்ற வாணிப, பொருளாதார, கலை நுணுக்கம் நிறைந்த சுற்றுலா ஈர்ப்பு மையமும் உண்டு. 'டோலோமைட்ஸ்' எனப்படும் பளபளப்பான மலைச் சிகரங்கள் வடக்கு ஆல்ப்ஸ் மலைத் தொடர்களில் உண்டு. இவை பச்சை, சிவப்பு, வெள்ளை நிறங்களில் மின்னும், கண்ணைக் கவரும் அற்புத அழகு கொண்டவை!

ஆல்ப்ஸ் மலைகளுக்கு இடையிலான பள்ளத்தாக்கும், இதன் வழியிலுள்ள மலைக்குகை பாதையும், இத்தாலி, ஃபிரான்ஸ், ஸ்விட்சர்லாந்திற்கான வாணிபப் பாதையை வகுக்கிறது. ஆல்ப்ஸ் மலைத் தொடர் வடக்கே மெஸ்லினாவிலிருந்து தெற்கே 'சிசிலி' தீவு வரை நீண்டுள்ளது. (இது கிட்டத்தட்ட இத்தாலியின் நீளம்!) இத்தாலியின் மிக உயர்ந்த சிகரம் 'பியன்கோ' 4,807மீட்டர்!

'போ' ஆறுதான் இத்தாலியின் மிக நீண்ட ஆறு. இதன் நீளம் '650'கி.மீ. இது அட்ரியாடிக் கடலில் கலக்கிறது. இத்தாலியில் கேரளா போல், உள்ளூர் நீர்வழிப் போக்குவரத்து நிறையவே உண்டு. இதில் பயணிக்கவும் கண்டுகளிக்கவும் நிறைய சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

இத்தாலியின் சமவெளிப் பகுதி 1/3 மட்டும் தான்! 'லோம்பார்டி' மிகப் பெரியது. கடற்கரை இயற்கை அழகும் வளைகுடாக்களும் நிரம்பிய நீளமான கடற்கரை! தாழ்வான மணற்பரப்பும் ஆழம் குறைந்த நீர்த்தடங்களும் உண்டு. இதன் தட்பவெப்ப நிலை கிட்டத்தட்ட இந்தியாவை ஒத்திருக்கிறது. முக்கியமாக ரோமாபுரி நாணயங்கள், தமிழ் நாட்டிலும் சோழர்கால நாணயங்கள் ரோமாபுரியும் கிடைத்ததாக தெரிவிக்கப்படும் தகவல்கள், இவர்களிடையே வாணிபத் தொடர்பு இருந்ததை நிரூபிக்கின்றன.

வெனிஸ் நகரம் இத்தாலியின் கடல் துறைமுகம். இதில் 120 தீவுகளும், 177 நீர்வழிப் பாதைகளும் உள்ளன. போ, டியால் நதிகளுக்கு இடையிலுள்ள போக்குவரத்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. உயர்தர கடற்படையும் கப்பல் கட்டும் தளமும் வெனிஸில் உள்ளன. இது 'அட்டரியாடிக்கின் ராணி' என்று அழைக்கப்பட்டது. 'வெனிஸ்'

சுற்றுலா விரும்பிகளின் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் நகரம்!

இத்தாலியின் இன்னொரு முக்கிய துறைமுகம் ஜெனோவா! சிசிலி தீவில் இன்னும் கூட தீ கக்கும் எரிமலைகள் உண்டு! இத்தாலியின் தெற்குப் பகுதியில் நில நடுக்கத்திற்கும் பஞ்சமில்லை. தீபகற்ப ஆறுகளில் கோடையில், நம்மூர் ஆறுகள் போல் வறண்டு போய்விடும். டைபர் நதி ரோம் வழியாகவே பாய்கிறது. வடக்கு தீபகற்ப இத்தாலியில் நிறைய ஏரிகளும் உண்டு. ஆனால் இத்தாலியின் இயற்கை வளம் மிகக் குறைவே! நிலக்கரி கிடையாது! இயற்கை வாயு, லிக்னைட், பெட்ரோலியம், கந்தகம், காரீயம், மாங்கனீசு, துத்தநாகம், பாதரசம் போன்றவை கிடைக்கின்றன. இத்தாலியில் ஆலிவ், ஆரஞ்சு, எலுமிச்சை, பனை, சிட்ரஸி, அத்தி, பேரீச்சை, மாதுளை, வாதுமை மரங்களும், கரும்பு, பருத்தி போன்றவையும், செஸ்நட், சைப்ரஸ், ஓக் மரங்களும் உண்டு. குறைந்த விலங்குகளே உள்ளன. மார்மோட், சேமோய்ஸ், இபெக்ஸ் என்ற பாலூட்டிகள் ஆல்ப்ஸில் வசிக்கின்றன. நரி, பருந்து, வல்லூறு, பால்கன், குயில், மரச் சேவல், கௌதாரி, பல்லி, பாம்பு போன்றவையே காணப்படுகின்றன.

இத்தாலியர்கள் 'இத்தாலியன்' மொழியையே பெரும்பாலும் பேசுகின்றனர். இது தவிர போல்சான்ட், கிரீக், ஃபிரெஞ்ச், இலத்தின் அல்பேனியன், ஸ்வேனியன், காடலன் போன்ற மொழிகளையும் பேசுகின்றனர்.

ரோம் இத்தாலியின் பெரிய நகரம் மட்டுமல்ல; சரித்திரப் புகழ்பெற்ற நகரமும்கூட. உலகின் முதல் ஜனநாயகமும் முதல் 'பார்லிமெண்ட்' அமைப்பும் இங்கேதான் தோன்றின. ரோமாபுரியின் கட்டடக்கலையும், மிகப் பெரிய திறந்த திரையரங்குகளும் உலகப் புகழ்பெற்றவை! ரோமாபுரி அரசர்களான ஜூலியஸ் சீசரும், அகஸ்டஸும், 'உலக கறுப்பு அழகி' கிளியோபாட்ராவும் மறக்க முடியாதவர்கள். காலத்தால் அழியாத காவியங்களை இயற்றிய




''பழம் நழுவி பாலில் விழுந்து பால் டம்ளர் உடைஞ்சுருச்சு!''

''எப்படி?''

''ஏன்னா விழுந்தது பலாப் பழமாச்சே!''

- ஜி. விஷ்ணுகிரி





'ஷேக்ஸ்பியரி'ன் நாயகர்கள் இவர்கள்!

பைசா நகரின் சாய்ந்த கோபுரம் உலக அதிசயமே!

ரோம் சுற்றுலா மையம், மிலன் பொருளாதார, வணிக நகரம். நேப்பிள்ஸ் இத்தாலியின் சுறுசுறுப்பான துறைமுகம், டியூரின் போக்குவரத்து மிகுந்த தொழில் நகரம். 'பாலிர்மோ' சிசிலியின் முக்கிய துறைமுகம். பழங்காலத்தில் இத்தாலியின் சிசரோ, குவின்டிலியர், பல்கலைக்கழகங்கள் மற்ற நாடுகளுக்கு முன்மாதிரியாய்த் திகழ்ந்தன. உலக கலாசாரத்தில் இத்தாலிக்கு முக்கியப் பங்கு உண்டு. உலகுக்கு ஓவியம், கலாசாரம், பாடல், கட்டடக் கலை, இலக்கியம், நடனம் போன்ற கொடைகளைத் தந்திருக்கிறது. புகழ் பெற்ற ஓவியங்களான, ஜியாட்டோ, ஃப்ரா ஏஞ்சலிலோ, மைக்கேல் ஏஞ்சலோ, லியானார்டோ டாவின்சி, ராம்ப்பல், டைடியன், அமொயா மேவுகிலியா போன்றவர்களும், ஆன்டோனியா விவால்டி, சீட்டனோ, டோனிஜெட்டி, கிளியாமோ புச்சினி, ஜியாக்சினோ போன்ற கவிஞர்களும் வாழ்ந்த பெருமை இத்தாலிக்கு உண்டு.

உலகப் புகழ்பெற்ற அரிய நூல்களின் தொகுப்பு, நேப்பிள்ஸ், ரோம், ஃப்ளாரன் டைன் அருங்காட்சியகத்தில் உள்ளது. இத்தாலிய நாணயம் 'லிரா' 80% மின் சக்தி வெப்ப சக்தியே! மீதம் நீர் மின் உற்பத்திதான்! இத்தாலியின் பிரதமர் ஏழு ஆண்டுகள் பதவி வகிப்பார்.



ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் உண்டு.

இத்தாலியின் சரித்திரம் மிக மிக நீண்டது.

1956ல் ஜோசப் ஸ்டாலின் உதவியுடன் அரசு ஏற்பட்டது. 1960களிலிருந்து, இத்தாலியில் பொருளாதார, அரசியல், மத மாற்றங்கள் உண்டாயின. 1975ல் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டது. பின்னர் அது சிதைந்து, 'சார்ட்ரோ பென்னி' என்ற ஜனநாயக குடியரசு உருவானது. தொழில் ரீதியாக முன்னேறிய நாடு இத்தாலி.



"இந்தியாவுல நான் வாங்காத பாராட்டை அமெரிக்காவுல போய் வாங்கினது எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா?" - சந்தோஷம் பொங்கி வழிகிறது ஷிவ்ராமின் முகத்தில். இவர் ஓர் 'ஓரிகாமி' கலைஞர். வெறும் பதினாறே வயதாகும் இவர் சமீபத்தில் இந்த 'ஓரிகாமி' பற்றிய புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கிறார். என்ன குழப்பமா இருக்கா... 'ஓரிகாமி'ன்னா என்ன? எதுக்காக இவரை அமெரிக்காவுல பாராட்டினாங்கன்னு... அவர்கிட்டேயே கேட்கலாம்...



அமெரிக்கர்கள் பாராட்டினார்கள்!







'ஓரிகாமி'ன்னா என்ன ஷிவ்ராம்?

இது ஒரு ஜப்பானியக் கலை. ரொம்பப் பழமையானது. அதாவது ஒரு பீஸ் பேப்பரை வெட்டாம, பேஸ்ட் வச்சு ஒட்டாம, விதவிதமா மடிச்சே நமக்குத் தேவையான உருவங்களைக் கொண்டு வர்றது தான் ஓரிகாமி. உலகம் முழுவதும் ரொம்ப வேகமா பரவிக்கிட்டு இருக்கு.

இது எப்படி உங்களுக்கு அறிமுகமாச்சு?

எனக்கு அஞ்சு வயசு இருக்கறப்போ என் அம்மா இந்த ஓரிகாமி பத்தின ஃபாரின் புத்தகம் ஒன்றை என்கிட்ட கொடுத்தாங்க. அதுல போட்டிருந்த மாதிரி யானை, பூனைன்னு விதவிதமான உருவங்களை உருவாக்கினேன். தொடர்ந்து பிராக்டீஸ் பண்ணி நானே புதுப்புது ஃபோல்டிங் ஸ்டைலை உருவாக்கிட்டேன்.

அப்படியா... அப்போ அந்த புது ஸ்டைல்ஸ் பத்தி சொல்லுங்க பார்ப்போம்!

ஃபோல்டிங் அதாவது மடிப்புகளோட எண்ணிக்கையைப் பொறுத்து தான் ஸ்டைல்ஸை உருவாக்கணும். உதாரணமா வண்ணத்துப் பூச்சியை ஐம்பது மடிப்புகளிலும் கொண்டு வர முடியும். நூறு மடிப்புகளிலும் கொண்டு வர முடியும். வெறும் இருபது மடிப்பு களிலும் கொண்டு வர முடியும். கிட்டத்தட்ட நானே ஏகப்பட்ட ஸ்டைல்களை உருவாக்கியிருக்கேன். அதுல வெறும் பதினெட்டை மட்டும் யூஸ் பண்ணி எப்படி உருவங்களைக் கொண்டு வர்றதுன்னு என்னோட புக்ல விவரமா எழுதியிருக்கேன்.

புக்கைப் பார்த்தே பழகிக்க முடியுமா?

நிச்சயமா... அதனோட பேரு 'Fold in Fold out', இப்போ நிறையக் கடைகள்ல கிடைக்குது. நான் அதுல எழுதினதை முறைப்படி செய்தா யார் வேண்டுமானாலும் விலங்குகள், பறவைகள், பொருட்கள்னு எதை வேணும்னாலும் ரொம்ப ஈஸியா கொண்டு வரலாம். அந்த அளவுக்கு தெளிவா எழுதியிருக்கேன்.

ஏன் புத்தகம் எழுதணும்னு நினைச்சீங்க..?

ம்... இது ஜப்பான் கலையா இருந்தாலும் கூட இதுக்கு அமெரிக்காவுல நல்ல வரவேற்பு. இது மிகப்பெரிய கலை. அதனால இதை வளர்க்க ஏதாவது செய்யணும்னு தோணிச்சு. அப்போ தான் தெரிஞ்சது இந்த ஓரிகாமி பத்தின புத்தகம் எதுவும் இந்தியாவுல எழுதப்படலைன்னு. சரி நாமே எழுதலாம்னு எழுதிட்டேன். இப்போ அதை வெளியிடவும் செய்தாச்சு. இதுதான் இந்தியர் ஒருவர் எழுதின முதல் 'ஓரிகாமி' புத்தகம்.

நீங்கள் செய்த மாடல்களை எக்ஸிபிஷன்ல வைத்ததுண்டா...?

ஓ... நிறைய வைச்சிருக்கேன். இந்தியால இருக்குற எல்லா முக்கிய சிட்டிகள்லயும் வைச்சாச்சு. சில இடங்கள்ல ரெண்டு மூணு தடவை கூட வைச்சுட்டேன். அமெரிக்கா போய் நியூயார்க்ல ஒரு பெரிய எக்ஸிபிஷன் போட்டேன். எனக்கு

யார் இந்தப் பிரபலம்?



இவரது தந்தை அரசியல் காரணங்களுக்காக தூக்கிலிடப்பட்டார்.

நல்ல ரெஸ்பான்ஸ்! அமெரிக்கர்கள் ரொம்பவே பாராட்டினாங்க. ரொம்ப ஆர்வமா என்கிட்ட கத்துகிட்டாங்க. இன்னும் நிறைய எக்ஸிபிஷன் போடணும்.

இது பத்தி நீங்க டியூஷன் ஏதும்...?

நானே சின்னப் பையன். இருந்தாலும் சில பள்ளிகளுக்கு நேர்ல போய் ஸ்டூடன்ஸ்கிட்ட 'டெமோ' பண்ணிக் காட்டுறேன். அதைப் பார்த்து அவங்களே எனக்கு செய்து காட்டுறாங்க. இப்போ சமீபகாலமா ஸ்டூடன்ஸ் மத்தியில இந்த 'ஓரிகாமி' மேல நல்ல ஈடுபாடு வந்திருக்கு.

மறக்க முடியாத அனுபவம்?

ஒரு தடவை என் எக்ஸிபிஷன்ல டேபிள் மேல ஒரு கப்ல நானே பேப்பர்ல பண்ணின சிப்ஸை போட்டு வைச்சிருந்தேன். திடீர்னு ஒருத்தர் அதை எடுத்து டக்குன்னு வாயில போட்டுட்டார். அதுக்குள்ள எங்கப்பா போய், 'சார்... அது ரியல் சிப்ஸ் இல்ல... ரீல் சிப்ஸ்'னு சொல்றதுக்குள்ள அவர் முழுங்கிட்டார். எல்லாரும் சிரிச்சுட்டாங்க. இதை என்னோட திறமைக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றின்னு நினைக்கறேன்.

இப்போ என்ன படிச்சுட்டு இருக்கீங்க?


எனக்கு ஐந்து வயசுலயே 'ஓரிகாமி' மேல ஆர்வம் வந்துடுச்சு. ஆனாலும் தொடர்ந்து படிச்சேன். ஆனா ஏழாவதுக்கு மேல் ஸ்கூல் போக முடியல. நிறுத்திட்டேன். என்னோட நேரம், வாழ்க்கை எல்லாத்தையும் 'ஓரிகாமி'க்காக ஒதுக்கிட்டேன். அப்புறம் பிரைவேட்டா பத்தாவது முடிச்சு, இப்போ +2 படிக்கறேன். என்னோட லட்சியம் இந்த அற்புதமான கலையை இந்தியா முழுவதும் பரப்பணும். முடிஞ்சா உலகம் முழுவதும் கொண்டு போகணும். தேவைப்பட்டா இன்னும் கூட புத்தகம் எழுதுவேன்.

பொழுதுபோக்கு?

இந்த 'ஓரிகாமி' மாதிரி 'இசை' எனக்கு இன்னொரு கண். ஃப்ளூட் வாசிக்கறது ரொம்பப் பிடிக்கும். கடம், சிதார் நல்லாவே வாசிப்பேன்.

- இரா. முத்துக்குமார்

படங்கள்: **முகில்**



''விளையாடினா தொப்பை குறையும்னு சொன்னீங்க, நானும் இரண்டு மாசமா விளையாடறேன், குறையவே இல்லையே?''


''என்ன விளையாட்டு விளையாடினீங்க?''

''கேரம்போர்டு, சீட்டுக்கட்டு தான்!''

- ஆர். சாரதா

மந்திரகேசவன் என்ற 'மண்டூ' ஒருமுறைக்கு இருமுறை சொன்னாலும் புரிந்து கொள்ளாத மந்தபுத்திக்காரன். மண்டூவின் தொல்லைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாத அவனது தந்தை குருகுலம் ஒன்றில் அவனைச் சேர்த்தார்.

குரு எழுவதற்கு முன்பே எழுந்து அங்குள்ள மலர்வனத்தில் உள்ள மலர்களையெல்லாம் பறித்து குருவின் மனைவியிடம் கொடுப்பதுதான் அவனது அன்றாட முதல் பணி. அன்றும் அதிகாலையிலேயே எழுந்த மண்டூ அரைகுறை தூக்கத்தோடு மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தான். குரு எழுந்து ஆற்றுக்குச் செல்வதற்காக வாசலுக்கு வந்தார். ''மண்டூ'' என்று அழைத்தார் குரு. ''என்ன





குருவே?'' என்றபடி வேகமாக அவரருகில் வந்து நின்றான் மண்டூ.

''உன்னைவிட வயதில் மூத்தவர்கள் யாரையும் நீ ஒவ்வொரு நாளும் முதன்முதலாகப் பார்க்கிறாய் என்று வைத்துக்கொள். அப்பொழுது நீ தலையைத் தாழ்த்தி இரு கைகளையும் கூப்பி வணக்கம் சொல்ல வேண்டும். புரிந்ததா? அதுதான் நல்ல பழக்கமும்கூட''

மண்டூவின் வணக்கம்!



என்றார் குரு.

''நாளை முதல் அதனைக் கண்டிப்பாக கடைபிடிக்கிறேன் குருவே'' என்றான் மண்டூ.

எப்படியாவது குருவிடமும் அவரின் மனைவியிடமும் நல்ல பெயரைப் பெற வேண்டும் என்று நினைத்திருந்த மண்டூ அன்றும் அதிகாலையிலேயே எழுந்து மலர்களைப் பறித்து வைத்துவிட்டு, இரண்டு குடங்களையும் ஆற்றுக்கு எடுத்துச் சென்று நீர் எடுத்தான்.



மலர்வனத்தைத் தாண்டி குடிலுக்குள் செல்கையில் எதிரே குருவின் மனைவி வந்தார். அவரைப் பார்த்தவுடன் பானைகளை விட்டு விட்டு இரு கைகளைக் கூப்பி ''வணக்கம் அம்மா'' என்றான். பானைகள் உடைந்ததைக் கண்டு குருவின் மனைவி பதற, சத்தம் கேட்டு குருவும் ஓடி வந்தார்.

''மன்னிக்கணும் குருவே. முதன்முறையாகப் பாக்கறப்போ இரு கை வணக்கம் சொல்லணும்னு நீங்கதானே சொன்னீங்க...'' என்று இழுக்க, குருவின் மனைவி குருவை முறைத்தார். குருவோ மண்டூவிடம், ''சொன்னேன்டா.. அதுக்காக இப்படியா...? நாளையிலிருந்து கையில இருக்கறத கீழே வச்சிட்டு வணக்கம் சொல்லு, போதும்'' என்றார் பரிதாபமாக. 'தான் என்ன செய்து விட்டோம். குரு ஏன் இப்படியாகி விட்டார்' என்று தனக்குள் நினைத்தான் மண்டூ.

அன்று இரவு குரு மண்டூவை அழைத்து ''நாளைக்கு காலையில நம்ம நாட்டு ராஜாவ பார்க்கப் போறேண்டா மண்டூ. நீ நாளைக்கு காலையிலேயே எழுந்து நல்ல மாம்பழங்களா பறிச்சு வை. தரையில மாம்பழங்கள் விழுந்தா அதை எடுக்காதே. கூடை நிறைந்ததும் என்னைக் கூப்பிடு. நான் வந்து வாங்கிக்கறேன்'' என்றார்.

இன்றைக்காவது நல்ல பெயரெடுப்போம் என்று நினைத்தபடி கூடையோடு மாமரத்தில் ஏறி கனிந்த பழங்களைப் பறித்து கூடையில் போட்டுக் கொண்டிருந்தான் மண்டூ. குரு அழகான பட்டாடைகளை உடுத்திக் கொண்டு மண்டூ நிற்கும் கிளைக்குக் கீழே வந்து நின்றார். 'இன்றைக்கு குருவை இப்போதுதானே முதன்முறையாகப் பார்க்கிறோம். அவருக்கு 'காலை வணக்கம் சொல்ல வேண்டுமே' என்று நினைத்தவனாக கைகளில் பிடித்திருந்த கூடையை இரண்டு கால்களுக்கிடையே வைத்து பிடித்துக் கொண்டு, இரு கையையும் ஒன்று சேர்த்து ''வணக்கம் குருவே'' என்றான்.

குருவும் மண்டூவின் செய்கையைப் பார்த்து மகிழ்ந்தவாறே வணக்கம் சொல்ல, அப்போது மண்டூவின் கால் லேசாகத் தடுமாற, மாம்பழக்கூடை அப்படியே குருவின் தலையில் 'பொத்' தென்று விழுந்தது. ''மன்னிக்கணும் குருவே! நீங்க சொன்னபடி கூடையைக் கீழே வச்சிட்டுதான் வணக்கம் சொன்னேன். ஆனா...'' என்று இழுத்தான். ''ஐயோ இரு கை வணக்கமே வேண்டாண்டா. ஒரு கை வணக்கமே சொல்லுடா போதும்'' என்றபடி தலையில் கை

யார் இந்தப் பிரபலம்?



பாகிஸ்தான் நாட்டின் தலைவியாக விளங்கியவர்.

வைத்தார் குரு.

குருவும் அவர் மனைவியும் அன்று அதிகாலையிலேயே ஊருக்குப் புறப்பட்டுச் சென்றனர். 'இன்றாவது குரு சொன்னது போல் அவருக்கு ஒரு கை வணக்கம் சொல்லலாம் என்று பார்த்தால் குரு காலையிலேயே ஊருக்குச் சென்று விட்டாரே' என்று நினைத்து மிகவும் கலங்கினான் மண்டூ.


நள்ளிரவில் வீட்டுக்கு வந்தார் குரு.

வீட்டுக்குள் எரிந்து கொண்டிருந்த விளக்கு திடீரென அணைந்துவிட, உடனே அவர் ''மண்டூ! மண்டூ!'' என்றழைத்தார். குருவின் அழைப்பொலி கேட்ட உடன் மண்டூ எழுந்து உட்கார்ந்து ''என்ன குருவே! எங்கே இருக்கீங்க?'' என்றான். ''நான் வீட்டுக்குள் இருக்கேண்டா. விளக்கு அணைஞ்சிட்டுது. திண்ணையில எரிஞ்சுகிட்டு இருக்குற தீவட்டியை எடுத்திட்டு வா'' என்றார்.

வலது கையால் தீவட்டியை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றான் மண்டூ. 'இன்று காலையில் இருந்து குருவை பார்க்கவேயில்லையே! அவருக்கு வணக்கம் சொல்ல வேண்டுமே' என்று நினைத்தவனாக கையில் பிடித்திருந்த தீவட்டியை விட்டு விட்டு வலது கையால் ''வணக்கம் குருவே'' என்றான்.

தீவட்டி கீழே விழுந்து குருவின் கால் விரல்களை உரசியபடி உருண்டு சென்று அருகில் கிடந்த துணியில் தீப்பிடித்தது. ஏற்கெனவே பசியில் இருந்த குரு காலில் தீப்பட்டதும் அலறி அடித்தபடி வீட்டைவிட்டு வெளியில் ஓடிச்சென்று ''ஓ'' என்று அலறினார். மண்டூ குருவிடம் ''என்னாயிற்று குருவே? நீங்கள் சொன்னபடிதானே ஒரு கையால் வணக்கம்...'' என்று இழுத்தான். ''ஐயோ! இனிமேல் நீ எனக்கு வணக்கமே சொல்ல வேண்டாம்டா. வேணும்னா நானே உனக்கு வணக்கம் சொல்றேன். ஆளை விடுடா..'' என்று கதறினார் குரு. திருதிருவென விழித்து பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் மண்டூ.

- ஜி. சுசில்,
எட்டாம் வகுப்பு,
பி.ஏ.சி.எம். உயர்நிலைப்பள்ளி,
இராஜபாளையம்




''என்ன நீ! தென்னை மரத்துக்கும் பனை மரத்துக்குமா ஓடி ஓடி போய் பார்க்கறே...?''

''தென்னை மரத்தில் தேள் கொட்டினா பனை மரத்தில் நெறி கட்டுமான்னு டெஸ்ட் பண்ணிப் பார்க்கறேன்...!''

''ரிசல்ட் என்ன ஆச்சு?''

''என்னோட 'கொடுக்கு' உடைந்ததுதான் மிச்சம்!''

- ஏ.எஸ்.யோகானந்தம்



இந்தத் தீபாவளிக்கு நீங்களே செய்யக் கூடிய (அம்மாவின் கண்காணிப்பில்) சுலபமான இரண்டு ஸ்வீட்களைக் கொடுத்திருக்கிறேன். ஸ்வீட் செய்து எல்லோரையும் அசத்துங்கள்!

தீபாவளி அன்று பலகாரங்கள் சாப்பிட்ட பின், அது சுலபமாக ஜீரணம் ஆக தீபாவளி விளையாட்டு உங்களுக்காக...

தேன் உருண்டை

(சிறிய கப் அளவில்:)

வறுத்த முந்திரிப்பருப்பு - 1 கப்

வறுத்த வேர்க்கடலை - ½ கப்

வறுத்த பாதாம் - 1 கப்

வறுத்த பொட்டுக்கடலை - ½கப்

பேரீச்சம்பழம் (கொட்டை எடுத்தது) - 6

சர்க்கரை - 2 கப்

தேன் - 2 டீஸ்பூன்

கொப்பரைத் தேங்காய்ப் பொடி - 4 டீஸ்பூன்

மிக்ஸியில் முதலில் சர்க்கரையைப் பொடித்து எடுக்கவும்.

பருப்புகளை ஒன்றாகப் போட்டுக் கரகரப்பாகப் பொடித்து எடுக்கவும்.

பேரீச்சம் பழங்களைப் பொடிப் பொடியாக நறுக்கவும்.

இவை அனைத்தையும் ஒன்றாகக் கலந்து தேனைச்





தீபாவளி ஸ்பெஷல்!

சேர்த்து உருண்டைகளாகப் பிடித்து கொப்பரைப் பொடியில் புரட்டி எடுத்து வைக்கவும்.

சத்தான தேன் உருண்டை தயார்.

மாரி ஸ்வீட்

மாரி பிஸ்கட் - 6
வெண்ணெய்
- 2 டேபிள் ஸ்பூன்
பொடித்த சர்க்கரை - 4 டேபிள் ஸ்பூன்
வெனிலா எஸன்ஸ்
- 3 துளிகள்
கோகோ பவுடர்
- 1 டேபிள் ஸ்பூன்

மாரி பிஸ்கெட்டை மிக்ஸியில் பொடித்து அதில் வெண்ணெய், பொடித்த சர்க்கரை, வெனிலா எஸன்ஸ், கோகோ பவுடர் எல்லாவற்றையும் கலந்து உருட்டி இரண்டு உள்ளங்கை

கள் நடுவில் வைத்து லேசாக அமுக்கவும். கெட்டியாக வராவிட்டால் மாரி பிஸ்கட் பொடியில் புரட்டிக் கொள்ளலாம். நடுவில் ஒவ்வொரு ஜெம்ஸ் வைத்து அலங்கரிக்கலாம்!

தீபாவளி விளையாட்டு

மணலில், வட்டங்கள் வரைய வேண்டும். (அதாவது பத்து பேர் விளையாடினால் ஐந்துக்கு குறைவான வட்டங்கள்) விளையாடும் நபர்களில், பாதிக்குக் குறைவான வட்டங்கள். ஒவ்வொரு நபருக்கும், மிக்சர், சேவு, முறுக்கு, சீடை என கார வகைகளில் ஏதேனும் ஒரு பெயரும், அல்வா, லட்டு, பூந்தி, மைசூர்பாகு என இனிப்பு பெயர்களில் ஏதேனும் ஒன்றையும் தரவேண்டும். எல்லோரும் வட்டமாகச் சுற்றி வர, ஒரு நபர் மட்டும் கை தட்டிக் கொண்டே இருக்க வேண்டும். திடீரென தட்டுவதை நிறுத்தி, இனிப்பு + காரம் அல்லது காரம் + காரம் அல்லது இனிப்பு + இனிப்பு இவற்றில் ஏதேனும் ஒரு ஜோடியைக் கூற, அதற்கேற்றாற்போல் ஒவ்வொரு வட்டத்திலும் நிற்க வேண்டும். வட்டம் கிடைக்காதவர்கள் வெளியேற வேண்டும். பின் சில வட்டங்களை அழித்து விட்டு, மீண்டும் வட்டமாகச் சுற்ற வேண்டும். கடைசி வட்டம் வரை வருபவர்களே வென்றவராவர்.

விளையாடுபவர்களின் எண்ணிக்கை கூடினாலோ, விளையாடும் பொழுதே அதிரடியாகவோ சிலர் இனிப்பு + காரம் + காரம். இனிப்பு + இனிப்பு + காரம், இனிப்பு + இனிப்பு + இனிப்பு, காரம் + காரம் + காரம் என்று கூட சொல்லலாம்!

வட்டங்களுக்குப் பதில் நாற்காலிகளையும், கைதட்டுவதற்குப் பதில் பின்னணியில் டேப்பையும் ஒலிக்கவிட்டு விளையாடலாம்!

ஓவியப் போட்டி

*டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை வருகிறது. இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: **கிறிஸ்துமஸ் மரம்.** உங்கள் கற்பனைக்கேற்றவாறு படத்தை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.*



கடைசித் தேதி: **4.11.2005**

நீங்கள் மிகவும் விரும்பும் கோகுலம் உங்கள் வீடு தேடி வர கோகுலம் சந்தா செலுத்துங்கள்.



பெயர்: ....

முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

துப்பறியும் மோப்ப நாய்கள்

ஆழி

குற்றவாளிகளையும், திருட்டுப்போன அல்லது காணாமல் போன பொருள்களையும், வெடி குண்டுகளையும் கண்டு பிடிக்க நாய்களைப் பழக்குகிறார்கள். போர்க் காலங்களில் விமான தளங்களைக் காக்கவும் நாய்களைப் பயன்படுத்துகிறார்கள்.





டாபர்மேன்

டாபர்மேன், அல்சேஷன், லாப்ரடார் ரிட்ரீவர் போன்ற நாய் இனங்கள் காவல் துறையில் பயன்படுத்தப்படுகின்றன. புத்திக்கூர்மை, சகிப்புத்தன்மை, மோப்ப உணர்ச்சி, விசுவாசம், வேகம், துணிவு ஆகியவை இந்த இன நாய்களுக்கு உண்டு. டாபர்மேன் நாய்கள் உலகத் தரம் வாய்ந்தவை.



நாய்களுக்கு இயற்கையிலேயே ஆயிரக்கணக்கான மோப்பங்கள் தெரியும். அவற்றில் 12 வகை மோப்பங்களை நன்கு பழக்குகிறார்கள். பழக்கும்போது அவற்றைக் கோபிப்பதோ அடிப்பதோ கூடாது. அவற்றுக்கு உணவு தராமல் இருப்பதே தண்டனை.



மோப்பம் பிடித்தல், குற்றவாளிகளைப் பிடித்தல், பொருள்களைக் கண்டு பிடித்தல், பாதுகாத்தல், தீயைத் தாண்டுதல், பிறர் கொடுக்கும் பொருள்களை ஏற்க மறுத்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப் படுகிறது.

நன்கு பயிற்சிப் பெற்ற மோப்ப நாய்கள் மணிக்குச் சுமார் 56 கி.மீ. வேகத்தில் ஓடக் கூடியவை. மனிதன் தாண்டுவதைவிட அதிக உயரம் தாண்டக் கூடியவை!



மோப்ப நாய்களுக்கு ஆங்கிலத்தின் மூலம் தான் பயிற்சி அளிக்கப் படுகிறது. ஆங்கிலத்தில் சொற்கள் எளிமையாகவும் சிறியவையாகவும் இருப்பதால் அவை விரைவில் கற்றுக் கொள்கின்றன என்கிறார்கள். வட இந்தியாவில், சில இடங்களில் இந்தியில் பயிற்சி அளிக்கிறார்கள். ஆறுமாதக் குட்டியாக இருக்கும்போதே பயிற்சியைத் தொடங்கிவிடுகிறார்கள்.



நாய்களுக்கு மனிதனின் மோப்ப சக்தியைப்போல் 100 மடங்கு அதிகம். கேட்கும் சக்தியும் அதிகம். 12 மீட்டர் தொலைவில் உள்ள ஒரு கடிகாரத்தின் 'டிக் டிக்' ஒலிகூட அதற்குத் தெளிவாகக் கேட்கும்!




மோப்ப நாய்களை அடிக்கடி குளிப்பாட்டினால், அவற்றின் மோப்ப சக்தி குறையும்; அதனால் 15 நாட்களுக்கு ஒரு முறைதான் குளிப்பாட்டுவார்கள்.



அல்சேஷன்

மோப்ப நாய்களுக்குப் பால், முட்டை, மாட்டு இறைச்சி, அரிசியுடன் காய்கறிகள் சேர்த்துச் சமைத்த சோறு, ரொட்டி, சில டானிக்குகள் முதலியவற்றைக் கொடுக்கிறார்கள். குட்டியாக இருந்தால் குழந்தை உணவு கொடுப்பார்கள்.




இரண்டு மனிதர்களின் விரல்ரேகை அடையாளங்கள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இதே போல், உடலில் உள்ள வேர்வை மணமும் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. உடலின் வேர்வை மணத்தையும் அவன் ஆடையில் படிந்துள்ள வேர்வை மணத்தையும் மோப்பம் பிடித்தே குற்றவாளியைக் கண்டு பிடித்து விடுகிறது மோப்ப நாய்!

திறமையான மோப்ப நாய் 30 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் கூட குற்றவாளி இருந்தாலும் மோப்பம் பிடித்து அவனைக் கண்டுபிடித்து விடும்!




நியூயார்க் 'கென்னடி' விமான நிலையத்தில், ஒரு விமானத்தில் இருந்த வெடிகுண்டை, 'பிராண்டி' என்ற ஜெர்மன் நாய் ஒன்று, முதல் முதலாகக் கண்டு பிடித்தது. அதற்குப் பிறகுதான் நாய்களைக் கொண்டு வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கலாம் என்பதைக் காவல் துறையினர் தெரிந்து கொண்டனர்!






வெடிகுண்டு மணத்தை
மோப்ப நாய்கள் மட்டுமே
அறிய முடியும். மனிதர்களுக்கு
இந்த மோப்புத் திறமை
இல்லை. ஒருமோப்ப நாய்
6 அல்லது 7 வகை
வெடிகுண்டுகளைக் கண்டு
பிடிக்க முடியும்!



ரஷ்யாவில் பூமிக்கு அடியில்
மறைந்து கிடக்கும் உலோக தாதுக்
களைக் கண்டுபிடிக்க மோப்பநாய்
களைப் பயன் படுத்துகிறார்கள்.

நல்ல நோட்டு எது,
கள்ள நோட்டு எது
என்பதைக்கூட
மோப்ப நாய்கள்
கண்டுபிடித்துவிடுகின்றன!





ஜெர்மனியில்தான்
முதல்முதலாகக் காவல்
துறையில் நாய்களைப்
பழக்கினார்கள். இந்திய ரயில்வேயில்
முதல் முறையாக 'தென்,ரயில்வே பாதுகாப்புப்
படை'யில்தான் மோப்ப நாய்கள் ஏற்படுத்தப்பட்டன.

விடுகதைப் பக்கம்



தை தை என்று ஆடுவாள்!

I. 1.சத்தம் செய்யும் மரம்; சாய்ந்து வளரும் மரம்; கோபம் கொள்ளும் மரம்; கொண்டால் எரியும் மரம்- அது என்ன?

2. மரமுண்டு; அடுப்பெரிக்க உதவாது, சீப்புண்டு; தலைவார முடியாது, பூவுண்டு; கொண்டைக்கு உதவாது- அது என்ன?

3. தவறினால் ஓடிடுவாள். தடுத்தால் நின்றிடுவாள். தைலத்தில் நின்று 'தா' 'தை' என்று ஆடுவாள்- அவள் யார்?

- வே.சுபஸ்ரீ,
பன்னிரண்டாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, நல்லூர்

II. 1. அடித்தால் வலிக்கும், கடித்தால் இனிக்கும்- அது என்ன?

2. கட்டைப் போலிருந்தவனை வெட்டிப் பிழிந்தால் ருசியோ ருசி - அது என்ன?

3. உச்சியில் பச்சைத் தோகை உள்ளங்காலில் ரோமம் - அது என்ன?

- கே.சிந்து, ராஜ்
மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்
பள்ளி, மயிலாடுதுறை

III. 1. கயிற்றில் சுற்றிய வனை வீசினால் தப்பாமல் தாளம் போடுவான் - அவன் யார்?

2. வெள்ளைக் கோட்டைக்குள் சருகுச்சேலை உடுத்தி பதுங்கி இருப்பாள் -அவள் யார்?

3. அவன் உடம்பில் விளக்கு எரிந்தது; ஆனால் அவன் எரியவில்லை- அவன் யார்?

- சி.செ.ரங்கசாமி,
பதினோராம் வகுப்பு,
அ.ஆ.மே.நி. பள்ளி, எடப்பாடி

விடைகள்:

I. 1. மூங்கில், 2. வாழைமரம் 3. கடுகு

II. அனைத்திற்கும் விடை கரும்பு

III. 1.பம்பரம் 2.வேர்க்கடலை 3.மின்மினிப்பூச்சி



சுடோகு என்றால் என்ன?

இப்போது, செய்தித்தாள்களில் சுடோகு என்று ஒரு புதிய குறுக்கெழுத்துப் புதிர் வெளியிடப்படுவதைப் பார்த்திருப்பீர்களே! அதற்கு உலகம் முழுக்க அமோக வரவேற்பு! உலகின் பல்வேறு நகரங்களிலும் மக்கள் ரயில், பஸ் பயணங்களின் போதும், பார்க், பீச்சுகளிலும், உணவு இடைவேளையிலும் சுடோகுவும் கையுமாக இருப்பதைப் பார்க்க முடியும்.

சுடோகு என்றால் என்ன?

இது ஒரு ஜப்பானிய புதிர். இதற்கு ஒரே எண் என்று அர்த்தம். சுடோகுவில் நீள வாக்கிலும், அகல வாக்கிலும் ஒன்பது கட்டங்கள் வீதம் மொத்தம் 81 கட்டங்கள் இருக்கும். இவை 3 x 3 ஆக ஒன்பது பெட்டிகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒன்று முதல் ஒன்பது வரையான எண்களை இந்த 81 கட்டங்களிலும் நிரப்ப வேண்டும்.

எப்படி?

நீளவாட்டத்தை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு ஒன்பது கட்டங்களிலும் 1 முதல் 9 வரையான எண்களை ஒரே தடவை மட்டும் பயன்படுத்த வேண்டும். அகல வாட்டத்திலும் அதே போல, 1 முதல் 9 வரையிலான எண்களை ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டும். அது மட்டுமில்லை 3 x 3 உள்ள ஒன்பது கட்டங்களிலும் ஒரு முறை 1 முதல் 9 வரை உள்ள எண்களை நிரப்ப வேண்டும்.

இப்போது, ஜப்பானிலும் அமெரிக்காவிலும் சுடோகு புதிர்கள் கொண்ட புத்தகங்கள் லட்சக் கணக்கில் விற்பனை





யாகின்றன. சுடோகு புதிர்களை அகில உலக அளவில் அறிமுகப்படுத்தியவர் வேனே கௌல்டு என்கிற ஓய்வு பெற்ற நீதிபதி. இவர் ஹாங்காங்கில் வசிக்கிறார்.

பத்திரிகைகளில் வெளியாகும் சுடோகு புதிர்களில் மிகச் சுலபம், சுலபம், நடுத்தரம், கடினம், மிகக் கடினம் என்று பல ரகங்கள் உண்டு. நீங்கள் முதலில் ஈஸி ரகத்துக்குச் சரியான விடை கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள்.

சுடோகு புதிர்கள் வேண்டுமானால், அவற்றுக்கான இணைய தளங்கள் நிறைய உள்ளன. உதாரணம்: www.sudoku.com

நிஜம் நிழலாகிறது!

பல்ப் வெளிச்சத்தில், கைகளைப் பயன்படுத்தி, பல விதமான நிழல்களை உருவாக்கும் கலை பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இங்கே அப்படி உருவாக்கப்பட்ட சில நிழல் உருவங்களைப் பார்த்து ரசியுங்கள்!

சைக்கிளுக்கு ஜே!

நீங்கள் தினமும் பள்ளிக்கு சைக்கிளில் போகிறீர்களா? ஜெர்மனியில் உள்ள அகாடமி ஃபார் ஸ்போர்ட்ஸ் சயின்ஸ் என்ற அமைப்பு நடத்திய ஆராய்ச்சியின் முடிவாக கண்டுபிடிக்கப்பட்டது இது. தினமும் சைக்கிள் ஓட்டினால், அது உடம்புக்கு நல்லதொரு உடற்பயிற்சி. மூட்டுகளுக்கு நல்லது. இரத்த ஓட்டம் சீராக இருக்கும். நோய் எதிர்ப்பு சக்தி கூட அதிகமாகும். அது மட்டுமா? ஒரு மாணவன் தினமும் இரண்டு கிலோ மீட்டர்



சைக்கிள் மிதித்து பள்ளிக்குப் போய் வந்தால், ஆண்டுக்கு ஆறு கிலோ வரை எடை குறையும்.

உங்கள் சைக்கிளின் சீட்டை உங்கள் உயரத்துக்கு ஏற்றபடி அட்ஜெஸ்ட் செய்து கொள்ளுங்கள். ஹாண்டில்பாரை, ஓட்டுவதற்கு சௌகரியமாய் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

சைக்கிள் ஓட்டுவது குறித்து உங்களுக்கு மேலும் தகவல் தேவை என்றால் www.whycycle.co.uk. என்ற இணைய தளத்துக்கு சைக்கிளில் ஒரு நடை போய்ப் பாருங்கள்!

இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெற்ற கவிஞர் ரவீந்திர நாத் தாகூர் எழுதிய மொத்த நூல்கள் 75. அவற்றில் ஒன்று தான் நோபல் பரிசு பெற்ற கீதாஞ்சலி. எழுபது வயதில் தூரிகை பிடித்து ஓவியம் வரைய ஆரம்பித்தார் தாகூர். அடுத்த பத்து வருடங்களில் அவர் வரைந்த ஓவியங்கள் மூவாயிரம்.

ஜோக்:

''சின்ன வயசில் நகம் கடிப்பேன். என் அப்பா நகம் கடித்தால், பெரியவனானதும் 'முட்டாளாக இருப்பாய்' என்று சொல்லுவார்.''

''ஓ! நகம் கடிக்கிற பழக்கத்தை நீ நிறுத்தவே இல்லை போலிருக்கு!''

தொகுப்பு:
எஸ். சந்திரமௌலி

குழந்தைகள் திருவிழா!

திருச்சி - ஸ்ரீரங்கம் பகுதிகளில் குழந்தை வாசகர் பேரவை என்ற அமைப்பை நடத்தி வருகிறார் சின்னை வெங்கட்ராமன். இந்த அமைப்பு மூலம் பல்வேறு பகுதிகளைச்



சேர்ந்த குழந்தைகளை அழைத்து பேச்சு, பாட்டு, கட்டுரை, ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன. பாரதியார் நினைவு நாளான செப்டெம்பர் 11 அன்று நடைபெற்ற விழாவில் போட்டியில் வென்றவர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. ஏராளமான குழந்தைகள் கலந்து கொண்டனர். தேசிய மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பெரியசாமி, அகஸ்தியர் பதிப்பக உரிமையாளர் எஸ்.கோபால கிருஷ்ணர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

- ஸ்ரீரங்கம்
திருநாவுக்கரசு

பாண்டவர்களின் பன்னிரண்டு ஆண்டுக்கால வனவாசம். சுற்றி அலைந்தவாறு, அவர்கள் 'த்வைதவனம்' வந்தனர். அதன் பெரும் மரங்களும் இயற்கை எழிலும் பீமனை வெகுவாகக் கவர்ந்தன. பரவசம் அடைந்தான். மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். காடே அதிர்ந்தது.

அதைக் கேட்டுப் பாம்புகள் பயந்தன. தமது பொந்துகளை விட்டு வெளிவந்து ஓட்டம் எடுத்தன. அதைக் கண்டு பீமசேனனின் மகிழ்ச்சி எல்லை மீறியது. அவன்




ஜானகி மணாளன்

அந்தப் பாம்புகளைத் துரத்திக் கொண்டு ஓடினான். கடைசியில் ஒரு குகைக்கு அருகில் வந்து சேர்ந்தான்.

அந்தக் குகையில் ஒரு பெரிய மலைப்பாம்பு வாசம் செய்து வந்தது. அது பீமனை 'லபக்'என்று பற்றிக் கொண்டது. 'நமக்குத்தான் ஆயிரம் யானைப் பலம் இருக்கிறதே...' இதன் பிடியிலிருந்து தப்புவதா பெரிய காரியம்...?' என்று நினைத்து, அதனிடமிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றான். ஆனால், பாம்பின் பிடி, மேலும் மேலும் இறுகியதே தவிர, அவனால் விடுபட

பீமனும் மலைப்பாம்பும்!





கோகுலம் சுழல் கோப்பை!

தர்மராஜபுரம், செஞ்சி, மதுரை, சிவகாசி, மாதேசம் பாளையம்... இந்த ஊர்களில் உள்ள ஒரு பள்ளிக்குத்தான் இந்த ஆண்டு சுழல் கோப்பை கிடைக்கப் போகிறது.
காத்திருங்கள்!

முடிய வில்லை.

பாம்பின் உண்மைப் பலம் பீமனுக்குப் புரிந்து விட்டது. அது சாதாரணப் பாம்பு அல்ல என்பதையும் அவன் புரிந்து கொண்டு விட்டான். எனவே, பாம்பிடம் அவன், "யார் நீங்கள்...? தயவு செய்து சொல்லுங்கள்... எதற்காக என்னைப் பிடித்தீர்கள்...?" என்றான்.

அதற்கு அந்த மலைப் பாம்பு, "நான் ஒரு ராஜரிஷி... நகுஷன். நீண்ட காலம் தவம் செய்து, ஈடில்லாத பலமும் பெரும் செல்வமும் ஈட்டினேன். அந்தத் தலைக்கு ஏறிய கர்வத்தில், அந்தணர்களை வேதனைப் படுத்தினேன். கேவலமாக நடத்தினேன். அவர்களை எனது பல்லக்குத் தூக்கிகளாகவும் நியமித்துக் கொடுமைப் படுத்தினேன். அதையெல்லாம் கண்டு வெகுண்டு எழுந்த அகஸ்திய முனிவர் என்னைப் பாம்பாகச் சபித்து விட்டார்.

"நான் சுவர்க்கத்திலிருந்து கீழே விழத் தொடங்கினேன். அப்போது முனிவரிடம் சாபத்தைத் திரும்பப் பெறுமாறு வேண்டினேன். அதற்கு அவர் 'என் சாபத்தை நானே எப்படி மாற்ற முடியும்? ஆனால் ஒன்று. பாம்பாக இருக்கும் போதும் உனக்கு உன் முன் ஜன்ம நினைவு இருந்து கொண்டே இருக்கும். உன்னிடம் வரும் யாராவது, உன் கேள்விகளுக்கு, நீ விரும்பும் சரியான பதிலைச் சொல்லிவிட்டால், அந்தக் கனமே உனக்குச் சாப விமோசனம் கிடைத்து விடும்' என்றார். அது முதல், நான் இந்தக் காட்டில் வசித்து வருகிறேன்" என்றது பாம்பு!

விவரம் அறிந்த பீமன் அதனிடமிருந்து தப்பிப்பது எப்படி என்று யோசிக்கலானான்.

அதே நேரத்தில், 'வெகு நேரம் ஆகியும் பீமன் இன்னும் திரும்பி வரவில்லையே...' என்று மற்ற நான்கு சகோதரர்களும் கலக்கமுற்றனர். நாற்புறமும் தேடிச் சென்றனர்.

யுதிஷ்டிரர் வெகு தூரம் தேடிக் கொண்டே, அந்த மலைப் பாம்பு வசித்து வந்த குகை அருகில்

வந்தார். அங்கு பீமன் பாம்பிடம் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

பீமன், "இது மலைப்பாம்பு அல்ல. ராஜரிஷி நகுஷன்... ஒரு சாபத்தின் காரணமாக இப்படி பாம்பாக மாறிவிட்டார். தனது உணவுக்காக என்னைப் பிடித்துச் சித்ரவதை செய்கிறார்..." என்றான்.

உடனே யுதிஷ்டிரர், அந்தப் பாம்பிடம், "மாவீரனாகிய நாகமே! இவன் என் தம்பி பீமசேனன். தயவு செய்து இவனை விட்டு விடு... நீ உண்பதற்கு, நாங்கள் வேறு ஏதாவது உணவைத் தேடி வந்து தருகிறோம்..." என்று வேண்டினார்.

அதற்கு அந்த மலைப்பாம்பு, "என் கேள்விகளுக்கு நீங்கள் சரியான பதிலைக் கூறினால் போதும்" என்றது.

"அதற்கு என்ன? சொல்கிறேனே...!" என்றார் யுதிஷ்டிரர் அமைதியுடன்.


மலைப் பாம்பு "அந்தணன் யார்? அவனிடம் என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்?" என்றது.

அதற்கு யுதிஷ்டிரர், "எவனிடம் சத்தியம், தானம், மன்னிக்கும் மனோபாவம், இரக்கம் போன்ற நற்குணங்கள் காணப்படுகின்றனவோ, அவனே அந்தணன்" என்றார்.

அந்தப் பதில் மலைப் பாம்பு விரும்பிய பதில் தான். எனவே, பீமசேனன் விடுவிக்கப்பட்டான். அதே கணம், அவருக்கும் சாப விமோசனம் கிடைத்துவிட்டது.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

செப்டெம்பர் மாதம் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டு, சரியான விடைகளையும் அளித்திருந்தனர். எனவே குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.



சரியான விடை:

1. நியூயார்க்
2. ஃபிரான்ஸ்
3. 302 அடி (மொத்த உயரம்)
4. சரி
5. ஹட்சன் ஆறு

பரிசு யாருக்கு?

1. வி. ரம்யா, கொளத்தூர், சென்னை.
2. அ. மைதிலி, ஏழாம் வகுப்பு, ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயா, ஆர்க்காடு.
3. வி. ஹரிணி மீரா, எஸ்.எஃப்.எஸ்.பள்ளி, புதுக்கோட்டை.
4. எம்.அனிஸா பேகம், கரட்டடிபாளையம், கோபி.
5. எம். தமீம் அன்சாரி, கும்மிடிப்பூண்டி, சென்னை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்!
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி!

வண்ணப் பட்டாசுகள்!

ஓவியப் போட்டி முடிவுகள்


அக்டோபர் இதழில் வண்ணப் பட்டாசுகள் என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



முதல் பரிசு: அ. ப்ரித்திகா, பத்தாம் வகுப்பு, அல்வேர்னியா மெட்ரிக் பள்ளி, கோவை



இரண்டாம் பரிசு: எஸ். பாலமுருகன், திருச்சி




மூன்றாம் பரிசு: எம். வசந்தா வாசவி, நான்காம் வகுப்பு, ஸ்ரீ சௌடாம்பிகா மெட்ரிக் பள்ளி, அருப்புக்கோட்டை



ஆறுதல் பரிசு: எஸ். கேசவராஜன், மணக்குடி, நாகை மாவட்டம்



ஆறுதல் பரிசு: த்.த்.யாழினி, ஆறாம் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு



அன்புள்ள ஜக்கு...



பெயரை மாற்றினால் வெற்றி கிடைக்குமா?

● எஸ். ஆறுமுகம்,
கழுகுமலை

? 'ஜக்கு' என்ற பெயருக்குப் பதிலாக 'சுக்கு' என்று வைத்தால் என்ன?

நீங்கள் எப்படி அழைத்தாலும் எனக்கு சந்தோஷம் தான் ஆறுமுகம். (என் ரசிகர்கள் உங்களைக் கோபித்துக் கொள்ளப் போகிறார்கள்!)



● என். ராஜ்குமார், சேலம்

? ஜக்கு, நான் உன்னைப் போல் பயந்தாங்கொள்ளி கிடையாது. சும்மா கையில பற்ற வச்சே வெடிகளைத் தூக்கிப் போட்டு வெடிப்பேன். உன்னால் முடியுமா?

நிச்சயமாக என்னால் முடியாது ராஜ்குமார். தைரியமாக இருக்க வேண்டியது தான்; ஆனால் அசட்டுத் தைரியமாக இருக்கக் கூடாது. வெடிகளைக் கையில் வைத்து தூக்கிப் போட்டு ஒரு போதும் வெடிக்காதீங்க, ரொம்ப ஆபத்து! மகிழ்ச்சிக்காகத்தானே பட்டாசு வெடிக்கிறோம். அதனால் கஷ்டப்படக் கூடாது இல்லையா?



சரி, உங்களைப் போன்றவர்களுக்காகத்தான் இந்த இதழில் தீபாவளி விளையாட்டு கொடுத்திருக்கிறோம். விளையாடிவிட்டு, தீபாவளிக்குத் தயாராகுங்கள் ராஜ்குமார்.

● டி.முருகேசன், திருவாரூர்

? பாம்புகளில் அதிக விஷமுள்ளது நாகப்பாம்புதானா ஜக்கு?

கடல்பாம்புகள் தான் அதிக விஷமுள்ளவை முருகேஷ்.

● ஆர். பிருந்தா, மதுரை

? நம் பெயரை மாற்றிக் கொண்டால் நம் வாழ்வில் வெற்றிகள் ஏற்படும் என்று சொல்கிறார்களே, உண்மையா ஜக்கு?

பெயர் என்பது நம்மை அடையாளப்படுத்திக் கொள்கிற ஓர் அம்சம்தான். திறமை, தன்னம்பிக்கை, கடின உழைப்புடன், நமக்கேற்ற சரியான துறையையும் தேர்ந்தெடுத்தால் நம் வாழ்க்கையில் முன்னேற்றமும் வெற்றியும் தானாகவே தேடி வரத்தானே செய்யும் அம்பிகா! 'செய்யும் தொழிலே தெய்வம்; அந்தத் திறமைதான் நமது செல்வம்' என்று எவ்வளவு அற்புதமாக பாட்டெழுதியிருக்கிறார் கல்யாண சுந்தரம்! பெயரை மாற்றிக் கொண்டால் முன்னேறலாம் என்றால் எல்லோருமே முன்னேறியிருப்பார்களே!

● வி.யமுனாகுமாரி, அவினாசி

? முகத்தில் பூசும் பவுடர் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது ஜக்கு?

Talk எனப்படும் மக்னீஷியம் சிலிகேட் கனிமத்தைத் தூளாக்கி முகப்பவுடர் தயாரிக்கப்படுகிறது. இது இயற்கையில் பாறைகளாக வெட்டி எடுக்கப்படுகிறது. இந்த Talk மிகவும் மிருதுவாகவும் வழவழப்பாகவும் இருக்கும். நம் நகத்தால் கீறினால் கூட தூளாகி விடும்; வெள்ளையாக இருக்கும். இதை நன்றாகத் தூளாக்கி, நறுமணப் பொருள்கள் சேர்த்து, முகப்பவுடர்கள் தயாரிக்கப்படுகின்றன யமுனா.

● சு. அபிராமி, காயக்காடு

? பம்பரம் சுற்றும்போது மட்டும் நிலையாக நிற்பது ஏன் ஜக்கு?

சீரான வேகத்தில் சுழற்றிவிடும் பம்பரத்தின் புவிஈர்ப்பு மையம், முறுக்கு விசையால் அதன் ஆணி வழி பிறழாமல் நிற்கிறது. இதனால் சுழலும் பம்பரம் நிலைகுலையாமல் இருக்கிறது அபிராமி.

இவர் தான் அந்தப் பிரபலம்!



பேனசீர் புட்டோ.

- ஜி.எஸ்.எஸ்

சாக்லேட் நியூஸ்!


சமீபகாலமாக ஸ்போர்ட்ஸ்ல பல முக்கியமான - சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்துட்டே இருக்கு.

முதல்ல கிரிக்கெட்... கடந்த நாலு மாதமா 'டென்னிஸ் எல்போ' பிரச்னையால கிரிக்கெட் பக்கமே தலை வச்சுப் படுக்காம இருந்த நம்ம சச்சின் ஒருவழியா ஃபீல்டுல இறங்கப் போறேன்னு அறிவிச்சதுதான் லேட்டஸ்ட் சாக்லேட் நியூஸ். அநேகமா இந்நேரம் சச்சினோட அதிரடி வெடிகள் உங்க காதை கிழித்துக் கொண்டிருக்கலாம்!





• ஆனந்த்



• பயஸ் - பூபதி

அடுத்து டென்னிஸ்... சானியா மேனியா எல்லாரையும் தாக்கின பிறகு லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதிங்கற பேரெல்லாம் பல பேருக்கு மறந்தே போச்சுல்ல... ஆனா அவங்களும் ஒரு பக்கம் அசத்திகிட்டுத்தான் இருக்காங்க. இப்போ சமீபத்துல வெளியான இரட்டையர் உலக தர வரிசைப் பட்டியல்ல மகேஷ் பூபதி 12வது இடத்துலயும், லியாண்டர் பயஸ் 14வது இடத்துலயும் இருக்காங்க.

செஸ்... ஆனாலும் இப்படி ஒரு அதிர்ச்சியை 'செஸ்' வநாதன்...சாரி... விஸ்வநாதன் ஆனந்த் நமக்குத் தந்திருக்கவே கூடாது தெரியுமா... அர்ஜென்டைனால நடந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில ரஷ்யாவோட அலெக்சானிடர் மோரோ செவிச் கிட்ட தோத்து, உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை அள்ளக் கிடைத்த வாய்ப்பைக் கோட்டை விட்டுட்டாருப்பா... இதுதான் ஷாக் ஆஃப் தி மன்த்.

- கலை

மிதக்கும் பட்டம்!

சுப்ர. பாலன்

பறக்குது பறக்குது
வானத்திலே!
பலவாய் நிறங்களைக்
காட்டுது பார்!


காற்றும் வெகுவாய்
அடிக்கிறதே!
கயிறைச் சரியாய்ப்
பிடித்துக் கொள்.

காகிதப் பட்டம்
கயிறோடு
கடகட என்றே
மேலேறும்!

கயிறும் இப்போ
அறுந்து விட்டால்
கண்ணா நீயும்
அழவேண்டாம்!

வானின் மேலே
சிறு பறவை
போலே பட்டம்
மிதக்கிறது!

நாளை உனக்குப்
புதிதாக
நானே ஒன்றைச்
செய்திடுவேன்!



அன்புடன்...

'கிறிஸ்துமஸ் தாத்தா!' படிப்பவர் நெஞ்சை கொள்ளை கொண்டார். 'பாரதப் பூங்கா'



அசத்தல் அட்டை!

மகாத்மாவின் மகத்துவத்தை நயமாகவே பறைசாற்றியது. மொத்தத்தில் கோகுலம் குதூகலம்!

- கே.எல்.சுபாக்கனி,
மேலகிருஷ்ணன்புதூர்

'கிறிஸ்துமஸ் வரும் பின்னே, கிறிஸ்துமஸ் தாத்தா வருவார் முன்னே' என்பது புதுமொழி. மாவீரன் கதை நன்றாக இருந்தது.

- ஆர்.மது, ஆர்.பாரதி,
ஆர். ஹரிபிரசாத்

பரிசு ஜோக்ஸ் நான்கும் நகைச்சுவை உணர்வுக்கு தூண்டுகோல். யார் இந்தப் பிரபலம் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலமானவர்களைப் பற்றி நாங்கள் தெரிந்து கொள்ள உதவுகிறது.

- நெ. மணிமேகலை,
நெ.சங்கராபரணி,
புவனகிரி

வௌவால்களில் 2000 இனங்கள் இருக்கின்றன. வௌவால் ஓர் ஆண்டுக்கு ஒரு குட்டிதான் போடும். 70 சதவீத வௌவால்கள் ஒரு நாளைக்கு 20 கிராம் இரத்தத்தை உணவாகக் குடிக்கின்றன என்பது போன்ற தகவல்களை 'ஆழி'யின் மூலம் அறிந்தேன். அட்டைப் படம் அசத்தல்!

- டி.முருகேசன்,
திருவாரூர்

என் தோழியின் பிறந்த நாளுக்கு கோகுலத்தைப் பரிசாக அளித்தேன். அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

- காயத்ரி முத்துக்கிருஷ்ணன்,
நெய்வேலி



புதிர் உலகம் விடைகள்

I. மொத்தப் பொற்காசுகள் 301. ஒவ்வொருவருக்கும் கிடைத்த பொற்காசுகள் 43.



II. தை, பொன், வயல், கண்ணாடி, ஆலமரம், தொலைக்காட்சி.

III. 11 + 12 + 1 + 2 = 26
10 + 9 + 3 + 4 = 26
8 + 7 + 6 + 5 = 26

IV. நண்பரின் விளக்கத்தால் அவர் தன் தந்தைக்கு ஒரே மகன் என்பது தெளிவாகிறது. ஆகவே, படத்தில் உள்ளவன் அவருடைய மகன்.

V. பேனா 14 x 5 = 70 ரூ
லேபிள் 69 x .25 = 17.25
சாக்லெட் =
17 x .75 = 12.75

100.00

VI. ரூ.1, ரூ.2, ரூ.4, ரூ.8, ரூ.16, ரூ.32, ரூ.64, ரூ.128, ரூ.256, ரூ.489 வீதம் பத்து பைகளுள் போட்டுக் கட்ட வேண்டும்.

VII. நீலகிரி

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 க	ரு	ம்	பு	■	ளி	வ	பா	2 தீ
ட்	■	■	ம்	■	■	■	■	ண்
ட	■	வி	3 க	■	ன்	4 வி	ர்	5 டா
ளை	க	6 ர	■	7 உ	■	ழி	■	மை
■	■	■	8 ப	ழ	ம்	■	■	■
9 அ	■	10 ப	■	வு	■	11 கா	ந்	தி
12 கி	ல்	லா	டி	■	13 நா	டு	■	ந்
ம்	■	■	■	■	வ	■	■	ல
14 சை	க்	கி	ன்	■	ல்	கி	க்	15 சி

10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள்: 1. வாளியின் கைப்பிடி 2. புகை 3. நாயின் கால் விரல் 4. சரவெடி 5. தொப்பியின் நிறம் 6. ராக்கெட் 7. ஸ்டூல் கால் 8. பச்சை சட்டை டிசைன் 9. தலையில் பூ 10. நட்சத்திரம்



டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு போன்றவை எடுக்க எடுக்க குறையாத செல்வம் அல்ல. அதே சமயம் காற்று, நீர் போன்றவையும் மாசு பட்டு வருகின்றன. சுற்றுச் சூழலைக் காக்கவும், எரிபொருள் பற்றாக்குறையைச் சமாளிக்கவும் நாம் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது அவசியம்.

கீழே உள்ள கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்.

I. சமைக்கும்போது கையாளப்படும் சிறந்த முறை எது?

அ) பிரஷ்ஷர் குக்கரைப் பயன்படுத்துதல்

1. ஆமாம் 2. இல்லை

ஆ) எப்பொழுதும் பெரிய பர்னரை எரிய விடுதல்

1. ஆமாம் 2. இல்லை

இ) சமைக்கும் எல்லா பொருள்களையும் எடுத்து வைத்துக் கொள்ளுதல்

1. ஆமாம் 2. இல்லை

II. பெட்ரோல் நீண்ட தூரம் பயன்பட

அ) அடிக்கடி பிரேக் போடுதல்

1. ஆமாம் 2. இல்லை

ஆ) வண்டியில் அதிக பாரம்

1. ஆமாம் 2. இல்லை

இ) குண்டும் குழியுமான சாலைகளில் பயணித்தல்

1. ஆமாம் 2. இல்லை

III. எது சேமிப்பு?

அ) வண்டியைப் பராமரிக்கும் செலவை மிச்சப்படுத்தி சேமிக்கலாம்

1. ஆமாம் 2. இல்லை

ஆ) இயந்திரங்களுக்கு எண்ணெய் விடுதல் எரிபொருள் சேமிப்பை விட சிறப்பானது

1. ஆமாம் 2. இல்லை

இ) குறைந்த விலையில் கிடைக்கும் தரமற்ற எரிபொருள் வடிகட்டியைப் பயன்படுத்துதல்

1. ஆமாம் 2. இல்லை

விடைகள் : I. அ-1, ஆ-2, இ-1
II. அ-2, ஆ-2, இ-2
III. அ-2, ஆ-2, இ-2

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka